# நிதித்துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு
## 2023 - 2024

### மானியக் கோரிக்கை எண். 16


## முனைவர் பழனிவேல் தியாக ராஜன்
### நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர்



©
தமிழ்நாடு அரசு
2023

# பொருளடக்கம்


| வரிசை எண் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| 1 | முகவுரை | 1 |
| 2 | தணிக்கைத் துறைகள் | |
| | i. உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை | 29 |
| | ii. கூட்டுறவுத் தணிக்கைத் துறை | 50 |
| | iii. மாநில அரசுத் தணிக்கைத் துறை | 56 |
| | iv. பால் கூட்டுறவுகளின் தணிக்கைத் துறை | 64 |
| | v. இந்து சமய அறநிறுவனங்களின் தணிக்கைத் துறை | 71 |
| 3 | நிருவாகத் துறைகள் | |
| | i. கருவூலக் கணக்குத் துறை | 74 |
| | ii. சிறு சேமிப்புத் துறை | 94 |
| 4 | இதர முகமைகள் | |
| | i. தமிழ்நாடு உட்கட்டமைப்பு மேம்பாட்டு வாரியம் | 99 |
| | ii. தமிழ்நாடு உட்கட்டமைப்பு நிதி மேலாண்மை நிறுவனம்(TNIFMC) | 109 |
| | இணைப்புகள் | |

## கொள்கை விளக்கக் குறிப்பு

## மானியக் கோரிக்கை எண்.16

## நிதித் துறை

## 2023-2024-ஆம் ஆண்டிற்கான
## கொள்கை விளக்கக் குறிப்பு

**முகவுரை:**

**“பொருள்கருவி காலம் வினை இடனொடு ஐந்தும்
இருள்தீர எண்ணிச் செயல்.”**

(குறள் 675)

ஒரு காரியத்தில் ஈடுபடுவதற்கு முன்பு, அதற்குத் தேவையான பொருள், ஏற்ற கருவி, காலம், மேற்கொள்ளப் போகும் செயல்முறை, உகந்த இடம் ஆகிய ஐந்தையும் குறையில்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

2. தமிழ்நாடு அரசின் பொது நிதியை செம்மையாக நிருவகிக்கும் பொறுப்பு நிதித்துறைக்கு வழங்கப்பட்டுள்ளது.

நிதித்துறையின் முக்கிய செயல்பாடுகள்:

i. இந்திய அரசமைப்புச் சட்டம் பிரிவு 202-இன்படி அரசின் ஆண்டு வரவு செலவு திட்ட மதிப்பீடுகளைத் தயாரித்தல்.

ii. மாநிலத்தின் கருவூலக் காப்பாளர் என்ற முறையில் தமிழ்நாடு அரசின் பொது நிதியை மேலாண்மை செய்தல்.

iii. மாநில அரசின் நிதி நிலை மேலாண்மை தொடர்பான கொள்கைகளை உருவாக்குதல்.

iv. அரசின் வரவுகளையும் அதற்கேற்றவாறு செலவுகளையும் சீராக பராமரித்தல்.

v. பல்வேறு துறைகளின் செலவின கருத்துருக்களை மதிப்பிட்டு கூர்ந்தாய்வு செய்தல்.

vi. உட்கட்டமைப்பு வளர்ச்சிக்கு நிதியளிப்பதற்கான மாற்று நிதி ஆதாரங்களைக் கண்டறிதல்.

**தொலை நோக்குத் திட்டம்**

3. துறைகளுக்கும் திட்டங்களுக்கும் முன்னுரிமை அளித்து, திறன்மிக்க நிதிமேலாண்மையுடன், மாநிலத்தின் நிதிநிலையின் வளத்தைப் பேணி பாதுகாத்து முன்னுரிமை அளிக்கப்பட வேண்டிய துறைகளையும் முன்னெடுப்புகளையும் செயல்படுத்துவதே

நிதித்துறையின் தொலைநோக்குத் திட்டமாகும். பெருகி வரும் சவால்களைச் சமாளிப்பதற்கு, தொழில்நுட்பத்தின் அடிப்படையிலான நவீன நடைமுறைகளை இத்துறை கடைப்பிடிக்கிறது. ஆண்டு வரவுசெலவுத் திட்டத்தின் பேரியல் கூறுகளான மொத்த வரவுகள் மற்றும் செலவினங்களை நிதித்துறை நிருவகிக்கிறது.

4. இந்த பரந்த கட்டமைப்பிற்குள், செலவினத்திற்கான முடிவுகள் குறித்து பிறதுறைகளுக்கு அதிக தன்னதிகாரம் வழங்குவதுடன் அதற்கான பொறுப்பினையும் கணிசமாக உயர்த்துவதை இத்துறை நோக்கமாகக் கொண்டுள்ளது. மேலும், இத்துறையானது அரசின் நிதியை திறம்பட பயன்படுத்துவதை உறுதிசெய்வதுடன், தணிக்கை முறையை மிகவும் வலுவானதாகவும் செயல்திறன்மிக்கதாகவும் மாற்றுகிறது. இந்த நோக்கங்களை அடைய பல்வேறு முன்னெடுப்புகள் மற்றும் இடையீடுகள் செயல்படுத்தப்படும்:

- கருவூல அமைப்பினை வலுப்படுத்துதல்.

- ஒருங்கிணைந்த நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் திட்டத்தை மேம்படுத்துதல் மற்றும் அதன் முழு பயன்பாட்டை உறுதி செய்தல்.

- ஏனைய துறைகளுக்கும் முகமைகளுக்குமான நிதிப்பாய்வினைக் கண்காணித்தல்.

- தணிக்கை முறைகளை மேம்படுத்துதல்.

- நவீன வரவு செலவுத் திட்ட செயல்முறைகளை ஏற்றுக்கொள்ளுதல்.

- பொறுப்புடைமை மற்றும் உற்பத்தித்திறனை அதிகரித்தல்.

- கொள்முதல் செயல்முறையின் வெளிப்படைத்தன்மை மற்றும் செயல்திறனை மேம்படுத்துதல்.

## சிறப்பு முயற்சிகள்

5. மாநிலத்தின் சிறந்த நிதி நிருவாகத்திற்காக இத்துறை பின்வரும் சிறப்பு முயற்சிகளை மேற்கொண்டுள்ளது.

### (i) பொருளாதார வல்லுநர் குழு

6. உலகின் தலைசிறந்த 5 பொருளாதார வல்லுநர்களை கொண்டு மாண்புமிகு தமிழக முதலமைச்சருக்கான பொருளாதார ஆலோசனைக் குழுவினை கடந்த 2021-ஆம் ஆண்டு ஜுன் மாதம் அரசு அமைத்தது.

இதுவரை இந்த பொருளாதார ஆலோசனைக் குழுவின் ஆலோசனைக் கூட்டம் 2021-2023-ஆம் ஆண்டுகளில் மூன்று முறை மாண்புமிகு முதலமைச்சர் தலைமையில் நடைப்பெற்றது.

கூடுதலாக, இந்த குழுவின் உறுப்பினர்கள் மாநிலத்திற்கு வருகை தந்து பல்வேறு துறைகளுடன் கலந்தாலோசித்து தேவையான ஆலோசனைகளை வழங்கி வருகின்றனர்.

மக்களைத் தேடி மருத்துவம், இல்லம் தேடி கல்வி, போன்ற பல்வேறு நலத் திட்டங்களுக்கும், 1 டிரில்லியன் டாலர் பொருளாதாரத்தை அடைவதற்கான வழிகள், மின்துறையில் சீர்திருத்தங்கள் போன்ற பல்வேறு திட்டங்களுக்கு இக்குழு உறுப்பினர்கள் ஆலோசனை

வழங்கியுள்ளனர். மேலும், இப்பொருளாதார ஆலோசனைக் குழுவின் வல்லுநர்களில் ஒருவரான திரு. அரவிந்த் சுப்பிரமணியன் தலைமையில் எரிசக்தித் துறை செயல்பாட்டில் நிலைத்ததன்மையை மேம்படுத்த பரிந்துரைகள் வழங்க துணைக்குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

**(ii) கூட்டாட்சி நிதி வடிவம்**

7. சரக்கு மற்றும் சேவை வரி தொடர்பான விவகாரங்கள் குறித்து ஆலோசனை வழங்க உச்சநீதிமன்றத்தின் மூத்த வழக்கறிஞர் திரு.அரவிந்த் பி. தத்தார் அவர்களின் தலைமையில் வருவாய் மற்றும் வரி விதிப்பு தொடர்பான சட்டமியற்றலில் புகழ்பெற்ற வல்லுநர்களைக் கொண்டு கூட்டாட்சி நிதி வடிவம் ஒன்றை உருவாக்க ஆலோசனைக் குழு அமைக்கப்பட்டது.

8. இக்குழுவின் முதல் அறிக்கை அரசிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. சரக்கு மற்றும் சேவை வரி குறித்த தீர்ப்பாயம் அமைப்பது தொடர்பாக, மாநில அரசின் கருத்துகள் மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்களால் அமைச்சர்கள் குழுவிற்குத்

தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆலோசனைக் குழுவின் ஏனைய பரிந்துரைகள் அரசின் தீவிர பரிசீலனையில் உள்ளன.

### (iii) புதிய சொத்து மேலாண்மை அமைப்பு

9. 2022-2023-ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில், "அரசு சொத்துக்களை முறையாக கணக்கிட அனைத்து அரசுத் துறைகளில் இருக்கும் அசையும் மற்றும் அசையா சொத்துக்களின் விவரங்களை சேகரித்து, அவற்றின் பயன்பாட்டை கண்காணிக்க ஒருங்கிணைந்த நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் திட்டத்துடன் (IFHRMS) இணைத்து ஒரு சொத்து மேலாண்மை மென்பொருள் (Asset Management Software) வரும் ஆண்டிலிருந்து அறிமுகப்படுத்தப்படும்" என அறிவிக்கப்பட்டது.

10. மேற்கூறிய அறிவிப்பின் அடிப்படையில், அரசுத் துறைகளில் உள்ள அனைத்து சொத்துக்களின் வாழ்க்கை சுழற்சியினை கண்காணித்து வளப் பயன்பாட்டை மேம்படுத்த மேக கணினியம் அடிப்படையிலான சொத்து மேலாண்மை

மென்பொருளானது (Cloud Based Asset Management Software) உருவாக்கப்பட்டுள்ளது.

11. இந்த மென்பொருள் மூலம் துறைகளின் கட்டுப்பாட்டில் உள்ள சொத்துக்களின் விவரப்பட்டியலை இணைய வாயிலாகவே நிகழ்நிலையில் பெற இயலும். இதன் மூலம் சொத்துக்களை உரிய கணக்குப் பதிவிற்கும் மற்றும் சரியான நேரத்தில் பராமரிப்பு மேற்கொள்வதையும் உறுதிபடுத்தும்.

**(iv) மின் கொள்முதல்**

12. தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டம், 1998-ன் கீழ் பொது கொள்முதலில் வெளிப்படைத்தன்மையைக் கொண்டு வரவும், ஒப்பந்தபுள்ளிகளை அழைக்கும் மற்றும் ஏற்றுக்கொள்ளும் நடைமுறையை ஒழுங்குபடுத்தவும் தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் விதிகள், 2000 உருவாக்கப்பட்டது.

13. 2022-2023-ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில், "01.04.2023 முதல் அரசு மற்றும் பொதுத்துறை நிறுவனங்களின் அனைத்து கொள்முதல்களுக்கும் மின் கொள்முதல் முறை

கட்டாயமாக்கப்படும் மற்றும் இதன்பொருட்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் விதிகளில் தேவையான திருத்தங்களை அரசு மேற்கொள்ளும் என்று அறிவிக்கப்பட்டது".

14. இந்த அறிவிப்பின் அடிப்படையில், 1998-ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒப்பந்தப்புள்ளிகளில் ஒளிவுமறைவற்ற சட்டம் மற்றும் 2000-ஆம் ஆண்டு விதிகளுக்கு ஏற்ப, ஒரு புதிய மின் கொள்முதல் வலைமுகப்பை "https://tntenders.gov.in" அரசு, தேசிய தகவல் மையத்தின் வாயிலாக (NIC) உருவாக்கி உள்ளது. பயனுக்கேற்ப மாற்றியமைத்தல் மற்றும் மாநிலம் முழுவதும் சேவையை அறிமுகப்படுத்துதல் உட்பட 3 ஆண்டுகளுக்கான (ஏப்ரல் 2022–மார்ச் 2025 வரை) இத்திட்ட மதிப்பீடு 501.51 இலட்சம் ரூபாய் ஆகும்.

15. தலைமைச் செயலகத் துறைகள், துறைத் தலைமை அலுவலகங்கள் மற்றும் அனைத்து வாரியங்கள் மற்றும் நிறுவனங்கள் ஆகியவற்றின் பணியாளர்களுக்கு இந்த மின்னனு கொள்முதல் செயல்பாட்டில் பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளன. 06.03.2023 முதல் இணைய வழி கருத்தரங்கு வாயிலாக இணையவழிப் பயிற்சியும் அளிக்கப்பட்டது. மேலும், இது அடுத்து வரக்கூடிய 3 முதல் 6 மாதங்கள் கால அளவில் இந்த பயிற்சி வலைமுகப்பு வாயிலாகவே கிடைக்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது. மின்னனு வலைமுகப்பை செயல்படுத்த ஏதுவாக தமிழ்நாடு 1998-ஆம் ஆண்டு ஒப்பந்தபுள்ளிகளில் ஒளிவுமறைவற்ற சட்டம் மற்றும் 2000ஆம் ஆண்டு விதிகள் ஆகியவற்றில் தேவையான திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன.

16. புதுப்பிக்கப்பட்ட இணையதள முகப்பு https://tntenders.gov.in 01.04.2023 முதல் செயல்பாட்டில் உள்ளது.

## (v) அதிக நிதிச்சுமையை ஏற்படுத்தும் வழக்குகளுக்கான மேலாண்மை அமைப்பு

17. மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் 2021-2022-ஆம் ஆண்டின் திருத்திய வரவு செலவுத் திட்ட உரையில் நிதிநிலை அறிக்கையில் அறிவித்தபடி அதிக நிதிச்சுமைகளை உருவாக்கக்கூடிய வழக்குகள் குறித்து அரசிற்கு வழிகாட்டுவதற்காக அரசாணை (டி) எண்.18, நிதித்(அ.ந.மு-பல்வகை)த்துறை, நாள் 19.03.2022-ல் உயர் அதிகாரம் கொண்ட வழக்கு ஆலோசனை மற்றும் மேற்பார்வை குழுவை அரசு அமைத்துள்ளது. இக்குழுவானது இதுவரை நடத்தியுள்ள 14 கூட்டங்களில், 14 துறைகள் தங்களின் 26 எண்ணிக்கையிலான அதிக நிதிச்சுமையுள்ள வழக்குகளுக்கு இக்குழுவின் ஆலோசனைகளைப் பெற்றுப் பயனடைந்துள்ளன.

18. மேலும், அரசிற்கு அதிக நிதிச்சுமையை உருவாக்கக்கூடிய வழக்குகள் அனைத்தையும் கூர்ந்து கண்காணிக்கும் பொருட்டு ஒருங்கிணைந்த நீதிமன்ற வழக்குகள் கண்காணிப்பு அமைப்பில்

இதற்கென தனியாக இணைய முகப்பு(portal) 14.09.2022 முதல் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

**(vi) நிதித்(பொதுத்துறை நிறுவனங்களின் மாநிலக் கழகம்) துறையை வலுப்படுத்துதல்**

19. நிதித்(பொதுத்துறை நிறுவனங்களின் மாநிலக் கழகம்) துறையை வலுப்படுத்துதலின் ஒரு பகுதியாக, பொதுத்துறை நிறுவனங்கள் மற்றும் சட்டப்பூர்வ வாரியங்களின் ஆண்டு / காலாண்டு அறிக்கைகளை ஆய்வு செய்யவும், இயக்குநர் குழு கூட்ட குறிப்புகள் மற்றும் நடுத்தர கால தொலைநோக்கு அறிக்கைகளை ஆய்வு செய்யவும், பொதுத்துறை நிறுவனங்களின் கடந்த கால மற்றும் தற்போதைய நிதி மற்றும் செயல்பாட்டு பகுப்பாய்வினை மேற்கொள்ளவும் ஆலோசகரைத் தேர்ந்தெடுப்பதற்கான நிர்வாக மற்றும் நிதி அனுமதி அரசாணை எண்.141/நிதி(பொ.மா.க)த்துறை, நாள் 24.05.2022-ன்படி வழங்கப்பட்டது. இதனடிப்படையில் M/s.எர்னஸ்ட் & யங் நிறுவனம் தேர்வு செய்யப்பட்டு, ஒப்புதல் கடிதம் 15.02.2023 அன்று வழங்கப்பட்டுள்ளது.

### (vii) நபார்டு திட்ட கண்காணிப்புப் பிரிவு

20. நபார்டு வங்கியின் உதவியுடன் செயல்படுத்தப்படும் திட்டங்கள் செம்மையாக, உரிய காலத்தில் நிறைவேறுவதை உறுதி செய்யும் நோக்கத்தில், தற்போது நிலுவையில் உள்ள திட்டங்களின் முன்னேற்றத்தை கள அளவில் தொடர்ந்து கண்காணிக்கவும், நபார்டு மற்றும் பிற நிதி நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டு நிதியுதவியை விரைந்து விடுவிப்பதை உறுதிபடுத்தவும், ஒரு "நபார்டு திட்ட கண்காணிப்பு பிரிவு" ஏற்படுத்த அரசாணை நிலை எண் 213, நிதித் (வ.ஆ-2) துறை நாள் 14.07.2022ல் ஆணையிடப்பட்டுள்ளது. இந்த பிரிவு 08.08.2022 முதல் செயல்பாட்டில் உள்ளது.

### (viii) வரவு செலவுத் திட்ட முயற்சிகள்

### தன்னதிகார வரவு செலவுத் திட்டம்

21. வரவு செலவுத் திட்ட உருவாக்கத்தில் நவீன நடைமுறைகளை அறிமுகப்படுத்தும் நோக்கத்துடன், 2022-2023 வரவு செலவுத் திட்டத்தில் பின்வரும் ஐந்து மானியங்களுக்கான கோரிக்கைகளில் தன்னதிகார வரவு செலவுத் திட்ட நடைமுறை எனும் புதிய முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

(i) மீன்வளம் மற்றும்  மீனவர் நலன்

(ii) பால்வளம்

(iii) சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றம்

(iv) குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள்

(v) மாற்றுத் திறனாளிகள் நலன்

தன்னதிகார வரவு செலவுத்திட்ட முறையானது, விரைவாக முடிவெடுத்தல், மேம்படுத்தப்பட்ட செயல்முறை, செலவினங்கள் குறைப்பு மற்றும் அதிக பொறுப்புணர்வை உறுதி செய்யும் அதே வேளையில் கால நேர விரயத்தை தவிர்ப்பதற்கும் துறைகளுக்கு கூடுதல் அதிகாரங்களை வழங்கவும் முயல்கிறது.

22. தற்போதுள்ள நடைமுறையில், வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகள் குறித்து முன்மொழிவுகள் வரப்பெற்று, சம்பந்தப்பட்ட துறைகளுடன் கூட்டங்கள் நடத்தப்பட்டு, ஒவ்வொரு நுணுக்கத் தலைப்புக்குண்டான செலவினத்தின் தேவைகள் ஆய்வு செய்யப்பட்டு, பின்னர் நிதித்துறையால் மதிப்பீடுகள் நிர்ணயிக்கப்படுகிறது. இவ்வாறு இறுதி செய்யப்பட்ட

தொகைகள் மொத்த நிதியொதுக்கீட்டிற்காக சேர்க்கப்படும்.

23. தன்னதிகார வரவு செலவுத் திட்ட முறையில், ஒட்டுமொத்த ஆண்டிற்கான வருவாய், மூலதனம் மற்றும் கடன் செலவினங்களின் வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகள் தீர்மானிக்கப்பட்டு, பின்னர் சம்பந்தப்பட்ட துறைக்குத் தெரிவிக்கப்படும். இந்த மொத்த நிதியொதுக்கத்திலிருந்து உள்தலைப்புகள், நுணுக்கத் தலைப்புகள் மற்றும் உள்நுணுக்கத் தலைப்புகளுக்கு உண்டான பல்வேறு செலவினங்களுக்கு நிதி ஒதுக்கீடு துறைகளால் செய்ய இயலும். மேலும், சில நிபந்தனைகளுக்குட்பட்டு, நிதியாண்டின் போது தேவைப்படும் நிதி, மறு நிதியொதுக்கம் வாயிலாக ஏனைய கணக்குத் தலைப்புகளுக்கும் துறை தலைமையே நிதியொதுக்கம் மேற்கொள்ள முடியும். மேற்கூறிய 5 மானியக் கோரிக்கைகளுக்கான தன்னதிகார வரவு செலவுத் திட்ட நடைமுறையானது 2023-2024 நிதியாண்டிற்கும் தொடர்கிறது. இந்த முன்னோடி செயல்முறையை உறுதிப்படுத்திய பிறகு, வரும்காலங்களில் மற்ற மானியக்கோரிக்கைகளுக்கும் படிப்படியாக

தன்னதிகார வரவு செலவு திட்ட நடைமுறையை விரிவாக்கம் செய்ய பரிசீலனை செய்யப்படும்.

**வரவு செலவுத் திட்டம் குறித்த மக்கள் கையேடு**

24. வரவு செலவுத் திட்ட மதிப்பீடு வெளியீடுகளில், ஒரு புதிய முயற்சியாக, வெளிப்படைத் தன்மையை மேம்படுத்தும் நோக்கத்துடன், 2022-2023 நிதியாண்டிற்கான 'வரவு செலவுத் திட்டம்' குறித்த மக்களுக்கான கையேட்டினை முதன்முறையாக நிதித்துறையால் வெளியிடப்பட்டது. வரவு செலவுத் திட்டத்தின் முக்கிய அம்சத்தை மக்கள் எளிதில் புரிந்துகொள்ளும் வகையில் எளிமையான வடிவிலும் வரைபட வடிவிலும் இந்த ஆவணம் வெளிப்படுத்தியுள்ளது. இந்த ஆவணம் வரவு செலவுத்திட்டம் குறித்த மக்களின் விழிப்புணர்வை அதிகரிக்கவும், அரசின் நிதிநிலைக் குறித்த அறிவார்ந்த விவாதங்களை ஊக்குவிக்கவும் கருவியாக செயல்படும். இந்த ஆவணம் சமீபத்திய வரவு செலவு திட்டத்திலும் வெளியிடப்பட்டுள்ளது.

**பன்னாட்டு நாணய நிதியத்தின் தொழில்நுட்ப உதவி**

25. மாநிலத்தின் பொது நிதி நிருவாகத்தில், குறிப்பாக வரவு செலவுத் திட்ட மதிப்பீடு உருவாக்கம் மற்றும் நிதி இடர் மேலாண்மை ஆகியவற்றில் சீர்திருத்தங்களைக் கொண்டு வருவதற்கு பன்னாட்டு நாணய நிதியத்துடன் நிதித்துறை இணைந்து செயல்பட்டு வருகின்றது.

பொதுநிதி நிருவாக சீர்திருத்த நடவடிக்கைகளை செயல்படுத்துவதற்காக, பேரியல் நிதி பிரிவு, நிதி நெருக்கடி மேலாண்மை பிரிவு மற்றும் நிதி ஆதாரம்/கடன் மேலாண்மை பிரிவு என மூன்று சிறப்புப் பிரிவுகள் நிதித்துறையில் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

முதற்கட்டமாக, 2022-2023 நிதியாண்டிலிருந்து வெளியிடப்பட்ட வரவு செலவுத்திட்டம் குறித்து மக்களுக்கான கையேடு மற்றும் 5 மானியக் கோரிக்கைகளுக்கான தன்னதிகார வரவு-செலவுத்திட்ட நடைமுறையானது 2023-2024-ஆம் நிதியாண்டிலும் தொடர்ந்து நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. மேலும், நிதித்துறையானது IMF-SARTTAC அதிகாரிகளுடன்

சந்திப்புகள் / பயிற்சி அமர்வுகளை முனைப்பாக மேற்கொண்டு வருவதுடன், 2022-2023ஆம் ஆண்டில் துறை வாரியான நிதி இடர் பகுப்பாய்வு செய்யத் தொடங்கியுள்ளது. இதே போன்று, 2022-2023ஆம் ஆண்டில் பேரியல் நிதி அளவுருக்களுடன் உள்ள ஒரு நடுத்தர கால நிதிக் கட்டமைப்பைத் தயாரிப்பதற்கு செயல்முறையும் நிதித்துறையால் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

(ix) சிறப்புப் பணிக்குழு

26. சிறப்புப் பணிக்குழுவானது, (STF) வங்கிக் கணக்குகளில் உள்ள நிதியை முழுமையாகக் கண்டறிந்து, அதில் காலம் கடந்துவிட்ட, பயன்படுத்தப்படாத நிதியைக் கண்டறிதல், கணக்குகளை முழுமையாக சரிசெய்தல். அனைத்து அரசு நிதியை கருவூல அமைப்பின் பார்வை வரம்பிற்குள், கட்டுப்பாட்டில் வைக்கப்படுவதை உறுதி செய்யவும் செயல்பட்டு வருகிறது.

27. வங்கிக் கணக்கு விவரங்கள் வங்கிகள், துறைகள் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர்களிடமிருந்து சேகரிக்கப்பட்டுள்ளது. தொடர் முயற்சிகள் மூலம் சிறப்பு பணிக்குழுவானது

மாநில கருவூலத்திற்கு மீள வரவேண்டிய நிதிகளை அடையாளம் கண்டுள்ளது.

## நிதித்துறையின் அமைப்பு

28. பின்வரும் துறைகள் / முகமைகள் நிதித்துறையின் நிருவாகக் கட்டுப்பாட்டில் உள்ளன:-

| | |
|---|---|
| **தணிக்கைத் துறைகள்** | |
| i. | உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை |
| ii. | கூட்டுறவுத் தணிக்கைத் துறை |
| iii. | மாநில அரசு தணிக்கைத் துறை |
| iv. | பால் கூட்டுறவுகளின் தணிக்கைத் துறை |
| v. | இந்து சமய அறநிறுவனங்களின் தணிக்கைத் துறை |
| **நிருவாகத் துறைகள்** | |
| i. | கருவூலக் கணக்குத் துறை |
| ii. | அரசு தகவல் தொகுப்பு விவர மையம் |
| iii. | சிறுசேமிப்புத் துறை |
| iv. | ஓய்வூதிய இயக்ககம் |
| **இதர முகமைகள்** | |
| i. | தமிழ்நாடு உட்கட்டமைப்பு மேம்பாட்டு வாரியம் (TNIDB) |
| ii. | தமிழ்நாடு உட்கட்டமைப்பு நிதி மேலாண்மை நிறுவனம்(TNIFMC) |

மேலே குறிப்பிடப்பட்டுள்ள துறைகளின் செயல்பாடுகள் பற்றிய விவரங்கள் இக்கொள்கை விளக்கக் குறிப்பில் இடம்பெற்றுள்ளன. ஓய்வூதிய இயக்ககம் மற்றும் அரசு தகவல் தொகுப்பு விவர மையம் ஆகியவற்றின் செயல்பாடுகள் பற்றிய விளக்கம், கோரிக்கை எண்.50 "ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும்" குறித்த கொள்கை விளக்கக் குறிப்பில் சேர்க்கப்பட்டுள்ளது.

## தணிக்கைத் துறைகள்

29. நிதித்துறையின் கட்டுப்பாட்டிலுள்ள பின்வரும் தணிக்கை துறைகளின் **மேற்பார்வை தலைவராக தணிக்கை துறைகளின்** தலைமை தணிக்கை இயக்குநர் செயல்படுகிறார்.

| வ. எண் | தணிக்கைத் துறைகளின் பெயர்கள் |
|---|---|
| 1. | உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை |
| 2. | கூட்டுறவுத் தணிக்கைத் துறை |
| 3. | மாநில அரசு தணிக்கைத் துறை |
| 4. | பால் கூட்டுறவுகளின் தணிக்கைத் துறை |
| 5. | இந்து சமய அறநிறுவனங்களின் தணிக்கைத் துறை |

## தலைமைத் தணிக்கை இயக்குநர்

30. தமிழ்நாடு சட்டமன்றத்தில் ஜுன் 21, 2021 அன்று இடம் பெற்ற ஆளுநர் உரையில், தணிக்கை மற்றும் மேற்பார்வை செயல்பாடுகளில் முழுமையான மறுசீரமைப்பு தேவை என்று சுட்டிக்காட்டப்பட்டது. 2021-2022 ஆம் ஆண்டிற்கான நிதித் துறையின் கொள்கை விளக்கக் குறிப்பில்,

"மாநில அரசின் தற்போதைய அனைத்து தணிக்கைத் துறைகளையும் மேற்பார்வையிட தலைமைத் தணிக்கை இயக்குநர் என்ற பதவி உருவாக்கப்படும். அவர் இந்திய தணிக்கை மற்றும் கணக்கு துறையிலிருந்து மாற்றுப்பணியில் பணியமர்த்தப்படுவார்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

மேற்கண்ட குறிப்பின் அடிப்படையில், அரசாணை (நிலை) எண்.102, நிதி (உள்ளாட்சி நிதி)த் துறை, நாள் 07.04.2022-இல் நிதித் துறையின் கீழ் செயல்படும் உள்ளாட்சி நிதி தணிக்கைத் துறை, கூட்டுறவு தணிக்கைத் துறை, மாநில அரசு தணிக்கைத் துறை, பால் கூட்டுறவுகளின் தணிக்கைத் துறை மற்றும் இந்து சமய அறநிறுவனங்களின் தணிக்கைத் துறை மற்றும்

எதிர்காலத்தில் உருவாகும் பிற தணிக்கைத் துறைகளுக்கும் மேற்பார்வை துறை தலைவராக செயல்பட தலைமை தணிக்கை இயக்குநர் என்ற பதவி உருவாக்கப்பட்டுள்ளது. இவர் தமிழ்நாடு நிதி தணிக்கைச் சட்டம் 2014, பிரிவு 3-ன் கீழ் உள்ளாட்சி நிதி தணிக்கை இயக்குநராகவும் நியமிக்கப்பட்டுள்ளார்.

**புதிய முயற்சிகள்:**

- அனைத்துத் தணிக்கை செயல்பாடுகளையும் சீரிய முறையில் கண்காணிக்க, இணைய அடிப்படையிலான விரிவான தணிக்கை தகவல் மேலாண்மை முறையினை (C-AIMS) ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் தொடங்கப்பட்டுள்ளன.
- தணிக்கைத் துறைகளின் தணிக்கை வரம்பின் கீழ் அனைத்து அமைப்புகளிலும் தணிக்கை மேற்கொள்ள சிறப்பான நடைமுறைகளை பயிற்றுவிக்கவும் நிபுணத்துவத்தை புகுத்தவும் பல்வேறு சீர்திருத்த நடவடிக்கைகள்

மேற்கொள்ளப்பட்டுள்ளன. தணிக்கைத் தரத்தினை மேம்படுத்துவதற்காக ஒட்டுமொத்த தணிக்கை தர மேலாண்மை கட்டமைப்பை (AQMF) நிறுவுதல்; மற்றும் தணிக்கைத் தரவுகளான பொதுத் தரநிலைகள், கள தரநிலைகள் மற்றும் அறிக்கையிடல் தரநிலைகள் துறை சார்ந்த தணிக்கைக் கையேடுகள் போன்ற தணிக்கைத் தரவுகளை அறிமுகப்படுத்தும் பணி நடைபெற்று வருகிறது.

- அரசின் தணிக்கை செயல்பாட்டில் குறிப்பிடத்தக்க மாற்றத்தை ஏற்படுத்த, முன்னோக்கு தணிக்கை திட்டங்கள், வருடாந்திர தணிக்கை திட்டங்கள், இடர் அடிப்படையிலான தணிக்கை உத்திகள், புள்ளியியல் மாதிரி முறைகள், IDEA, Tableau போன்ற தரவு பகுப்பாய்வு நுட்பங்கள் ஐந்து தணிக்கை துறைகளிலும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதன்படி, ஏப்ரல் 2023 முதல் செயல்திறன் தணிக்கைகள், இணைக்கத் தணிக்கைகள்

மற்றும் தகவல் தொழில்நுட்பத் தணிக்கைகளை மேற்கொள்வதற்கான கருப்பொருள்கள் மற்றும் தலைப்புகளின் தேர்வு, தணிக்கைக் குழுக்களின் அமைப்பு, சிறப்புக் குழுக்கள் போன்ற செயல்பாடுகள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

- தணிக்கை துறைகளின் அனைத்து பணியாளர்களின் திறனை வளர்ப்பதற்கும் பயிற்சியளிப்பதற்கும் ஏதுவாக முன்முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு, பொது தணிக்கை தரநிலைகளுக்கு ஏற்ப அவர்களின் அறிவையும் திறனையும் மேம்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

- 2020-2021-ஆம் ஆண்டிற்கான உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறையின் வருடாந்திர தொகுப்புத் தணிக்கை அறிக்கை அங்கீகரிக்கப்பட்டு, அச்சிடப்பட்ட நகல்கள்

தமிழ்நாடு சட்டமன்ற பேரவையில் வைக்கப்படும்.

- பணியாளர்கள் அமைப்பினை சீரமைக்கும் முயற்சியின் ஒரு பகுதியாக, பால் கூட்டுறவு சங்கங்களின் தணிக்கைத் துறையில் தற்போது அயற்பணியில் பணிபுரியும் கூட்டுறவுத் துறை பணியாளர்களை நிரந்தர அடிப்படையில் ஈர்ப்பதற்கான முயற்சிகள் எடுக்கப்படும்.

- உள்ளாட்சி நிதி தணிக்கைத் துறை மூலம் பல்வேறு உள்ளாட்சி அமைப்புகளில் இருந்து ஓய்வு பெற்ற பணியாளர்களுக்கான ஓய்வூதியத்தை அங்கீகரிக்கும் செயல்முறையை முழுமையாக கணினிமயமாக்குவதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன. இது போலவே, மேற்குறிப்பிட்ட ஓய்வூதியதாரர்கள் டிஜிட்டல் வாழ்வு சான்றிதழ்கள் (டிஎல்சி) / வாழ்வு சான்றிதழ்களை இணையதள வழியாக தாக்கல் செய்வதற்கு ஏதுவாக

ஜீவன் பிரமான் இணைய தளத்தில் இணைக்கப்பட்ட கீழ்க்கண்ட நிறுவனங்களான இந்தியன் போஸ்ட் பேமென்ட் பேங்க் (IPPB) இருக்கும் இடத்திலேயே இச்சேவையை பெறுவதற்கு, இ-சேவை மையங்கள் / பொது சேவை மையங்களின் பயோ மெட்ரிக் சாதனத்தினை பயன்படுத்தி ஓய்வூதியதார்கள் பெறுவதற்கான நடவடிக்கைகள் முன்னேற்றத்தில் உள்ளது.

- "பொது நகைக் கடன் தள்ளுபடி திட்டம்" மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் அவர்களால் அறிவிக்கப்பட்டது. இதன் விளைவாக, மார்ச் 2022-ல் கூட்டுறவு தணிக்கைத் துறையால் நவீன தணிக்கைக் கருவிகளைப் பயன்படுத்தி சிறப்புத் தணிக்கை மேற்கொண்டதில் தகுதியற்ற 1,19,125 பயனாளிகள் (மொத்த பயனாளிகளில் சுமார் 9%) அடையாளம் காணப்பட்டனர். இதன் மூலம் அரசுக்கு

519.64 கோடி ரூபாய் சேமிப்பு கிடைக்கப்பெற்றது.

- மேலும் அக்டோபர் 2022-இல் மகளிர் சுய உதவிக் குழுக் கடன் தள்ளுபடி தணிக்கை கூட்டுறவுத் தணிக்கைத் துறையால் நடத்தப்பட்டு, சுய உதவிக் குழுக் கடன் தள்ளுபடித் தொகை தகுதியான பயனாளிகளைச் சென்றடைவதை உறுதி செய்தது. இதன் மூலம் அரசுக்கு தோராயமாக ரூ.468 கோடி சேமிக்கப்பட்டுள்ளது.
- அரசின் அனைத்து தணிக்கைத் துறைகளின் செயல்முறைகளையும், செயல்பாடுகளையும் சீரமைக்க, உரிய பரிந்துரைகளை வழங்கிட அரசாணை எண்.54, நிதி(உ.நி)துறை நாள் 26.02.2022 இல் தணிக்கை சீர்திருத்தக் குழு (Audit Reforms Committee) அரசால் அமைக்கப்பட்டது.

- உள்ளாட்சி நிதித் தணிக்கை மற்றும் மாநில அரசு தணிக்கைத் துறைகளின் உதவி ஆய்வாளர்களுக்கான புத்தாக்கப் பயிற்சியை சென்னை அண்ணா பல்கலைக்கழகத்தில் 30.01.2023 அன்று மாண்புமிகு நிதி மற்றும் மனித வள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார்.
- ஒழுக்கம், நன்னெறி மற்றும் நன்னடத்தை ஆகியவை பொதுத் தணிக்கையாளர்களின் அடித்தளமாக இருப்பதால், தணிக்கைப் பணியாளர்கள் கடைபிடிக்க வேண்டிய நெறிமுறைகள் வகுக்கப்பட்டு விரைவில் வெளியிடப்படும்.

## உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை

31. மாநிலத்திலுள்ள நகர்ப்புற மற்றும் ஊரக உள்ளாட்சி நிறுவனங்கள், பல்கலைக்கழகங்கள், வேளாண்மை விற்பனைக் குழுக்கள், மாவட்ட நூலக ஆணைக் குழுக்கள் மற்றும் இதர நிறுவனங்களின் கணக்குகளை அவற்றுக்குரிய சட்ட விதிகளின் கீழ் தணிக்கை செய்யும் பணி உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறையைச் சார்ந்ததாகும். இரண்டாவது மாநில நிதிக் குழுவின் பரிந்துரையின்படி தமிழ்நாடு உள்ளாட்சி நிதித் தணிக்கை சட்டம் 2014 (த.நா. சட்ட எண்:24) 15.12.2014 மற்றும் 24.08.2016 முதல் நடைமுறைக்கு வந்துள்ளது.

32. தமிழ்நாடு உள்ளாட்சி நிதித் தணிக்கைச் சட்டம் 2014-இன் அட்டவணையில் குறிப்பிட்டுள்ள நிறுவனங்களின் தணிக்கையைத் தவிர பிரிவு 5-ன்படி அரசின் முன் அனுமதியுடன் இதர நிறுவனங்களின் தணிக்கையும் உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை இயக்குநரால் சட்டப்பூர்வமாக மேற்கொள்ளப்படுகிறது. இத்துறையால் உள்ளாட்சி அமைப்புகளில் மேற்கொள்ளப்படும். தணிக்கையானது

பின்தணிக்கைப் பணிகளை உறுதி செய்யக்கூடிய பொதுவான தேவைகளை பூர்த்தி செய்கின்றது. உள்ளாட்சி அமைப்புகளின் கணக்குகளைச் சரிபார்த்தல், வரவு செலவுகள் முறையாக உள்ளனவா எனச் சரிபார்த்தல், மேற்படி வரவு செலவுகள் சம்பந்தப்பட்ட சட்டத்திற்குட்பட்டும் விதிகளின்படியும், அரசாணைகளின் படியும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றனவா என்பதனை உறுதி செய்தல், உள்ளாட்சி அமைப்புகளின் கணக்குகள் அவ்வமைப்புகளின் செயல்பாட்டின் உண்மை நிலையைப் பிரதிபலிக்கின்றனவா என்பதை சரிபார்த்தல் ஆகிய நோக்கங்களோடு உள்ளாட்சி அமைப்புகளின் தணிக்கைகள் இத்துறையால் மேற்கொள்ளப்படுகின்றன.

33. தமிழ்நாடு உள்ளாட்சி நிதித் தணிக்கைச் சட்டம் 2014 பிரிவு 20 -ன்படி உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்குநரால் ஆண்டுதோறும் தொகுப்புத் தணிக்கை அறிக்கை சட்டமன்றத்தில் வைப்பதற்காக அரசிற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். பின்வரும் தொகுப்புத் தணிக்கை அறிக்கைகள் சட்டமன்றத்தில் வைக்கப்பட்டுள்ளன.

| வ. எண் | ஆண்டு | தற்போதைய நிலை |
|---|---|---|
| 1) | 2015-2016 | 09.07.2018 அன்று சட்டப்பேரவையில் சமர்ப்பிக்கப்பட்டது |
| 2) | 2016-2017 | 05.02.2021 அன்று சட்டப்பேரவையில் சமர்ப்பிக்கப்பட்டது |
| 3) | 2017-2018 | 13.09.2021 அன்று சட்டப்பேரவையில் சமர்ப்பிக்கப்பட்டது |
| 4) | 2018-2019 | 13.09.2021 அன்று சட்டப்பேரவையில் சமர்ப்பிக்கப்பட்டது |
| 5) | 2019-2020 | 24.03.2022 அன்று சட்டப்பேரவையில் சமர்ப்பிக்கப்பட்டது |
| 6) | 2020-2021 | நடைபெறும் சட்டப்பேரவை கூட்டத் தொடரில் சமர்ப்பிக்கப்படவுள்ளது |

34. தற்போது உள்ளாட்சி நிதித் தணிக்கை துறையின் தணிக்கைக் கட்டுப்பாட்டின் கீழ்

செயல்பட்டு வரும் நிறுவனங்களின் விவரம் இணைப்பு -1(அ)-இல் உள்ளது.

## உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறையின் நோக்கம்

35. உள்ளாட்சி அமைப்புகளுக்கு வரி செலுத்துவோரின் நலன்கள் பாதுகாக்கப்படுவதனை உறுதி செய்வதோடன்றி உள்ளாட்சி அமைப்புகளுக்கு அரசு மற்றும் பிற நிதி உதவி அளிக்கும் நிறுவனங்கள் வழங்கும் நிதி முழுவதும் வழங்கப்பட்ட காரணங்களுக்காக பயன்படுத்தப்படுகிறதா என்பதையும் அவை உரிய பயனாளிகளின் நலனுக்கு பயன்படுத்தப்படுகிறதா என்பதையும் தணிக்கையில் உறுதி செய்யப்படுகிறது.

### கிராம ஊராட்சி அமைப்புகளின் சோதனைத் தணிக்கை

36. கிராம ஊராட்சிகளைப் பொறுத்தமட்டில் மொத்த ஊராட்சிகளின் எண்ணிக்கையில் 22 சதவிகிதம் சோதனைத் தணிக்கையாக உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறையால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. மொத்தம் உள்ள 12,525 ஊராட்சிகளில்

ஆண்டு தோறும் 2,839 கிராம ஊராட்சிகளில் சோதனைத் தணிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

**உடன் நிகழ் தணிக்கை (Concurrent Audit)**

37. தற்போது 19 மாநகராட்சிகளிலும், 09 நகராட்சிகளிலும் மற்றும் 13 பல்கலைக்கழகங்களிலும் உடன் நிகழ் தணிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. 2000-2001-ஆம் ஆண்டு முதல், 388 ஊராட்சி ஒன்றியங்களில் காலாண்டுத் தணிக்கை முறையை அரசு அறிமுகப்படுத்தியுள்ளது. இதன்படி 116 ஊராட்சி ஒன்றிய அலுவலகங்களை தலைமையிடமாகக் கொண்டு, ஒவ்வொரு மூன்று அல்லது நான்கு ஊராட்சி ஒன்றியங்களுக்கு ஒரு ஆய்வாளர் மற்றும் ஒரு துணை ஆய்வாளர் அல்லது ஒரு உதவி ஆய்வாளர் அடங்கிய ஒரு குழு வீதம் தணிக்கைக் குழுக்கள் இதற்கென அமைக்கப்பட்டுள்ளன. உடன்நிகழ் தணிக்கை செயல்படுத்தப்படுகின்ற மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளின் விவரம் இணைப்பு 1-(ஆ)-இல் காணலாம்.

**உடன்பின்-தணிக்கை (Immediate Post Audit) முறை**

38. உடன்நிகழ் தணிக்கைச் செயல்படுத்தப்படுகின்ற 19 மாநகராட்சிகளிலும் 10 நகராட்சிகளிலும் உடன்பின் தணிக்கை செயல்பட்டு வருகின்றது. இம்முறையின்படி செலவுச் சீட்டுகள் உடனுக்குடன் தணிக்கை செய்யப்பட்டு, குறைபாடுகள் நிருவாகத்திற்கு தெரிவிக்கப்படுகின்றது. தணிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட குறைகளை உடனுக்குடன் நிருவாகத்தால் களைய இச்செயல்முறை வழிகோலுகிறது.

உடன் நிகழ் தணிக்கையின்போது, தணிக்கையில் கண்டறியப்படும் தணிக்கை மறுப்புரைகள், தணிக்கைச் சீட்டுகள் வாயிலாக உடனுக்குடன் சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்குத் தெரிவிக்கப்பட்டு, அவற்றிற்குப் பெறப்படும் பதில்கள் சரிபார்க்கப்பட்டு குறைகள் சரி செய்யப்பட்டதை உறுதி செய்யுமிடத்து, அந்த தணிக்கை மறுப்புரைகள் நீக்கப்பட்டு, நிலுவையில் உள்ள மறுப்புரைகளையும் வரவு மற்றும் செலவுகள் தொடர்பான பத்திகளும்

இறுதி செய்யப்பட்டு அவற்றை உள்ளடக்கியதாக தணிக்கை அறிக்கைகள் வெளியிடப்படுகின்றன.

**உடன்நிகழ் தணிக்கைக்குட்படாத பிற அமைப்புகளின் தணிக்கை**

39. உடன்நிகழ் தணிக்கைக்குட்படாத எஞ்சியுள்ள 2 மாநகராட்சிகள், 129 நகராட்சிகள், 10 பல்கலைக்கழகங்கள், இதர உள்ளாட்சி அமைப்புகளான பேரூராட்சிகள், மாவட்ட ஊராட்சிகள், விற்பனைக் குழுக்கள், உள்ளூர் நூலக ஆணைக் குழுக்கள், உள்ளூர் திட்டக் குழுமங்கள் மற்றும் பிற பல்வகை நிறுவனங்களின் தணிக்கை, ஆண்டுதோறும் மேற்படி நிறுவனங்களிலிருந்து ஆண்டுக் கணக்குகள் பெறப்பட்ட பின்னர், மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் நிகழ்வின் அடிப்படையிலான (Accrual based) கணக்கு வைப்பு முறையை செயற்படுத்துதல்**

40. நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் பின்பற்றப்பட்டு வந்த ரொக்க அடிப்படையிலான கணக்கு வைப்பு முறைக்குப் பதிலாக மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் நிகழ்வின் அடிப்படையிலான கணக்கு வைப்பு முறை (Accrual based

Accounting System) 1999–2000, 2000-2001 ஆகிய கணக்காண்டுகளிலிருந்து இரு கட்டங்களாக செயற்படுத்தப்பட்டுள்ளது. அனைத்து பேரூராட்சிகளிலும் 2002-2003 ஆம் ஆண்டு முதல் இந்த கணக்கு முறை செயல்படுத்தப்பட்டுள்ளது. 2016-2017 முதல் மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் 7 இலக்க குறியீடுகளை கொண்ட தேசிய அளவிலான நகராட்சிகளின் கணக்கு நடைமுறை சார்ந்த கணக்கீடு முறை அமல்படுத்தப்பட்டுள்ளது.

41. ஓர் ஆண்டின் நிதி சார் நடவடிக்கைகளைத் தெரிந்துகொள்ள உதவும் வருவாய் மற்றும் செலவுக் கணக்குகளையும் (Income and Expenditure Account) ஒரு குறிப்பிட்டகால அளவில் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளின் உண்மையான நிலையை அறிந்து கொள்ள உதவும் இருப்புநிலைக் குறிப்புகளையும் (Balance Sheet) பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கியல் கோட்பாடுகளின்படி (GAAP) தயாரித்து கணக்குகள் பேணுவதே இந்த கணக்கு முறையின் உள்ளடக்கம் மற்றும் நோக்கமாகும்.

42. இந்த நடைமுறையினால் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் அவற்றின் சொத்துக்களை உரிய மதிப்பீட்டு முறைகளோடும், சொத்துப் பதிவேட்டின் மூலமும் கணக்குகளில் சேர்த்து அறிந்துகொள்ள முடியும். வெளிப்படைத் தன்மையுள்ள இந்த புதிய கணக்கு முறைகளைச் செயல்படுத்தியிருப்பதால், நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் பல்வேறு மூலதன திட்டங்களுக்கும் நலத்திட்டங்களுக்கும் நிதியுதவி அளிக்க பல நிதி நிறுவனங்கள் முன் வரும் நிலை ஏற்பட்டுள்ளது.

**உள்ளாட்சி அமைப்புகளின் ஆண்டுக் கணக்குகள் மற்றும் பல்கலைக் கழகங்களின் ஆண்டுக் கணக்குகளுக்கு தணிக்கை சான்று வழங்குதல்**

43. உள்ளாட்சி அமைப்புகளின் ஆண்டுக் கணக்குகளுக்குத் தணிக்கைச் சான்று, கடன் வழங்கும் பல்வேறு நிறுவனங்களிலிருந்து நிதி பெறுவதற்கு அத்தியாவசியமானதாகும். மேலும் தணிக்கைச் சான்று அளிக்கப்படாத கணக்குகள் அங்கீகாரமற்றது என்பது சர்வதேச அளவில் ஏற்றுக் கொள்ளப்பட்ட நியதியாகும். எனவே அரசாணை (நிலை) எண்.93, நிதி (நிதிக்குழு-IV)த் துறை, நாள் 28.03.2003-இல் வெளியிடப்பட்ட

ஆணைகளின்படி, நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் செயல்படுத்தப்பட்டு வரும் நிகழ்வின் அடிப்படையிலான கணக்குப்பதிவு (Accrual Based Accounting) முறைப்படி கணக்குகள் தயார் செய்யப்பட்டு இத்துறையால் தணிக்கை செய்யப்பட்டு சான்றளிக்கப்படுகின்றன.

44. பல்கலைக் கழக மானியக்குழு, மாநில / ஒன்றிய அரசு மற்றும் இதர நிதி அளிக்கும் நிறுவனங்களால் இத்துறையின் தணிக்கை வரம்பிற்குட்பட்ட பல்கலைக்கழகங்களுக்கு வழங்கப்படும் மானியங்கள் பயன்படுத்தபட்டதற்கு இத்துறையினால் தணிக்கைச் சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன.

**தணிக்கை மறுப்புரைகள் தீர்வு செய்யும் நடைமுறை**

45. தணிக்கை அறிக்கையின் மீதான தொடர் நடவடிக்கை எடுப்பது இத்துறையின் இன்றியமையாத பணிகளில் ஒன்றாகும். தணிக்கையின் போது கண்டறியப்படும் பெரும் முறைகேடுகள் உடனடியாக சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளின் நிருவாக அலுவலர்களின் கவனத்திற்கு எடுத்துச்


செல்லப்படுகின்றன. தணிக்கை அறிக்கைகளில் சுட்டிக் காட்டப்பட்டுள்ள பெரும் முறைகேடுகள் மற்றும் தொகை இழப்புகள் பற்றிய விவரங்கள் தனியறிக்கைகள் மூலம் அரசு மற்றும் நிர்வாக துறைகளின் தொடர் நடவடிக்கைக்காக எடுத்துச் செல்லப்படுகின்றன.

46. தணிக்கை மறுப்புரைகளுக்கு பெறப்படும் பதில்கள் சரிபார்க்கப்பட்டு ஏற்கத்தக்க விளக்கங்கள் அளிக்கும் நிலையில் தணிக்கைத் தடைகள் நீக்கப்படுகின்றன. மேலும் தணிக்கைத் தடைகளுக்கான பதில்கள் பெறப்பட்டு, தொடர்புடைய நிருவாகத் துறை ஏற்பாடு செய்யும் கூட்டமர்வின் மூலமாகவும், இத்துறையின் மண்டல மற்றும் மாவட்ட அலுவலர்களால் தணிக்கைத் தடைகளுக்கு உடனடி தீர்வு காணப்படுகிறது.


47. தணிக்கையின் போது தொடக்க நிலை மற்றும் இறுதி நிலை விவாதமுறை பின்பற்றப்படுவதால், தணிக்கையில் அவ்வப்போது சுட்டிக்காட்டப்படும் தவறுகளைச் சரி செய்ய இது வாய்ப்பாக அமைகிறது.

## 48. மாவட்ட அளவிலான உயர் நிலைக் குழு மற்றும் மாநில அளவிலான உயர் நிலைக் குழு அமைத்தல்

### மாவட்ட அளவிலான உயர் நிலைக் குழு




### மாநில அளவிலான உயர் நிலைக் குழு



- ஊராட்சி ஒன்றியங்களைப் பொறுத்தமட்டில், மாவட்ட ஆட்சியரைத் தலைவராகக் கொண்டு மாவட்ட உயர்நிலைக் குழுக்களும், ஊரக வளர்ச்சி ஆணையரை தலைவராகக் கொண்டு மாநில உயர்நிலைக் குழுவும் அமைக்கப்பட்டுள்ளன.

- பேரூராட்சிகளைப் பொறுத்தமட்டில் மாநில அளவில் பேரூராட்சிகளின் இயக்குநரை தலைவராகக் கொண்டும், மாவட்ட அளவில் மாவட்ட ஆட்சியரைத் தலைவராகக் கொண்டும் பேரூராட்சிகளுக்கான உயர்நிலைக் குழுக்கள் அரசு ஆணை எண். 1 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (பேரூ2), நாள் 04.01.2007-ல் அமைத்து ஆணையிடப்பட்டுள்ளன.
- அனைத்து மாநகராட்சிகள் (சென்னை நீங்கலாக) மற்றும் நகராட்சிகளுக்கான மாவட்ட உயர் நிலைக் குழு, மாவட்ட ஆட்சித் தலைவரை தலைவராகக் கொண்டும், மாநில அளவிலான

உயர்நிலைக் குழு நகராட்சி நிர்வாக இயக்குநரை தலைவராகக் கொண்டும் அரசு ஆணை (நிலை) எண்.65, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள். 22.05.2007-இன்படி அமைக்கப்பட்டுள்ளது.

- நடப்பு நிதியாண்டில் 11 மாநகராட்சிகளுக்கு மாவட்ட அளவிலான உயர்நிலைக் குழுக் கூட்டங்கள் நடத்தப்பட்டன. இவற்றில் 9760 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள 244 சிறப்பு தணிக்கை தடைகள் மீது முடிவெடுக்கப்பட்டுள்ளது.
- நடப்பு நிதியாண்டில் 41 நகராட்சிகளுக்கு மாவட்ட அளவிலான உயர்நிலைக் குழுக் கூட்டங்கள் நடத்தப்பட்டன. இவற்றில் 9477 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள 1331 சிறப்பு தணிக்கை தடைகள் மீது முடிவெடுக்கப்பட்டுள்ளது.

**சிறப்புப் பணிகள்**

49. வழக்கமான தணிக்கைப் பணிகளுடன் கீழ்க்காணும் சிறப்புப் பணிகளும் இத்துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

**(i) உள்ளாட்சி அமைப்பு பணியாளர்களுக்கு ஓய்வூதியப் பயன்கள் வழங்குதல்**

நகராட்சிகள், பேரூராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியப் பணியாளர்களின் ஓய்வூதிய / குடும்ப ஓய்வூதியப் பயன்களுக்கு சான்று / ஒப்பளிப்பு மற்றும் தொகை வழங்குதல் போன்ற பணிகள் உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்ககத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நடப்பு நிதியாண்டில் 27,197 ஓய்வூதியதாரர்கள், நான்கு தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் மூலம் மாதாந்திர ஓய்வூதியம் பெறுகின்றனர். ஓய்வூதியத்திற்கான தொகை சம்பந்தப்பட்ட துறைத் தலைவர்களால் மாநில நிதி ஆணைய பகிர்வு நிதி தொகையிலிருந்து ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

### (ii) உள்ளாட்சி அமைப்புகளின் ஓய்வூதியதாரர்கள் குறைகள் தீர்த்தல்

உள்ளாட்சி அமைப்புகளின் ஓய்வூதியதாரர் / குடும்ப ஓய்வூதியதாரர்கள் தங்கள் ஓய்வூதியம் / குடும்ப ஓய்வூதியம் முன்மொழிவுகள் தொடர்பான குறைகளை களைவதற்கும் தேவைப்படும் விவரங்களைக் காலதாமதம் இன்றி உடன் பெற்றுக் கொள்வதற்காகவும் உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்ககத்தில் தகவல் மையம் தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

### (iii) நகராட்சி ஓய்வூதியதாரர்கள் நல மற்றும் குடும்ப பாதுகாப்புத் திட்டம் நிர்வகித்தல்

ஓய்வூதியதாரர்கள் நலத் திட்டம் மற்றும் குடும்பப் பாதுகாப்புத் திட்டம் அரசாணை (பல்வகை) எண்.120, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 25.05.1999 இன் படி, நகராட்சி ஓய்வூதியதாரர்களுக்கு 01.08.1999 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த இரண்டு நலத் திட்டங்களும் உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்குநரால் நிர்வகிக்கப்பட்டு வருகின்றன. நடப்பு நிதியாண்டில் ஓய்வூதியதாரர்கள் நலநிதித்திட்டத்தின் கீழ் 18 கோரிக்கைகள் தீர்வு

செய்யப்பட்டு 6.24 இலட்சம் ரூபாயும், ஓய்வூதியதாரர்கள் குடும்ப பாதுகாப்பு திட்டத்தின்கீழ் 152 கோரிக்கைகள் தீர்வு செய்யப்பட்டு 63.71 இலட்சம் ரூபாயும் அனுமதிக்கப்பட்டுள்ளது.

**(iv) ஊராட்சி ஒன்றிய ஓய்வூதியதாரர்கள் நல மற்றும் குடும்ப பாதுகாப்புத் திட்டம் நிர்வகித்தல்**

ஓய்வூதியதாரர்கள் நலத் திட்டம் மற்றும் குடும்பப் பாதுகாப்புத் திட்டம் அரசாணை (பல்வகை) எண்.23, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (இ7)த் துறை, நாள் 15.03.2013-இன்படி, ஊராட்சி ஒன்றிய ஓய்வூதியதாரர்களுக்கு 01.04.2013 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டங்களின் கீழ் நடப்பு நிதியாண்டில் ஓய்வூதியதாரர்கள் நலத்திட்டத்தில் 179 கோரிக்கைகள் தீர்வு செய்யப்பட்டு 75.18 இலட்சம் ரூபாயும், குடும்ப பாதுகாப்பு திட்டத்தின்கீழ் 405 கோரிக்கைகள் தீர்வு செய்யப்பட்டு 4.71 இலட்சம் ரூபாயும் அனுமதிக்கப்பட்டுள்ளது.

**(v) உள்ளாட்சி அமைப்புப் பணியாளர்களின் வருங்கால வைப்பு நிதி இருப்புத் தொகைகளுக்கு வட்டி அளித்தல்**

உள்ளாட்சி அமைப்புப் பணியாளர்களின் வருங்கால வைப்பு நிதியும் அவற்றிலிருந்து செய்யப்பட்ட முதலீடுகளும் அரசால் 1967 -ஆம் ஆண்டு முதல் ஏற்கப்பட்டன. வருங்கால வைப்பு நிதிக் கணக்குகளின் இருப்புகளுக்கு வட்டி வழங்குவதற்கு உள்ளாட்சி நிதித் தணிக்கை துறை இயக்குநருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. நடப்பு நிதியாண்டில் ரூ.16.84 கோடி ரூபாய் உள்ளாட்சி அமைப்புகளுக்கு பொது வருங்கால வைப்பு நிதி வட்டியாக அளிக்கப்பட்டுள்ளது.

**(vi) அறக்கட்டளைகளின் பொருளாளர்**

உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்குநர், 01.04.1952 முதல் இத்துறையால் பராமரிக்கப்படும் அறக்கட்டளைகளின் பொருளாளராகவும் செயல்பட்டு வருகிறார். அறக்கட்டளைகளை அரசு ஏற்று ஒப்பளித்து அறக்கட்டளைகளின் நிருவாகத் திட்டங்களை அரசிதழில் வெளியிடுகிறது.

தற்போது அறக்கட்டளை நிதிப் பொருளாளர் கட்டுப்பாட்டில் 23.25 லட்சம் ரூபாய் மதிப்புள்ள

4 மத்திய அறக்கட்டளைகளும், 37.04 கோடி ரூபாய் மதிப்புள்ள 891 மாநில அறக்கட்டளைகளும் உள்ளன.

**உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறையால் மேற்கொள்ளப்படும் பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத் தணிக்கை**

50. அரசாணை (நிலை) எண். 260, நிதி (ஓய்வூதிய குறை தீர்ப்பு) துறை, நாள் 15.10.2015-ன்படி உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்குநரால் உள்ளாட்சி அமைப்பு பணியாளர்களின் பங்களிப்பு ஓய்வூதிய திட்டத் (Contributory Pension Scheme) தணிக்கை மேற்கொள்ளப்படுகிறது. இதன் மூலம் பணியாளர்களின் சந்தா மற்றும் நிர்வாக பங்களிப்பின் சரித்தன்மை உறுதி செய்யப்படுகிறது. நடப்பு நிதியாண்டில் 2021-2022-ஆம் ஆண்டிற்கு 288 ஊராட்சி ஒன்றியங்கள், 11 மாநகராட்சிகள், 79 நகராட்சிகள் மற்றும் 418 பேரூராட்சிகளின் பங்களிப்பு ஓய்வூதியக் கணக்குகள் தணிக்கை செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட உள்ளாட்சி நிறுவனங்களால் பதிவேற்றம் செய்யப்பட்ட தரவுகளையும் அதன் சரித்தன்மையினையும்

தணிக்கைத் துறையினரால் சரிபார்க்கப்பட்டு தணிக்கையில் அங்கீகரித்து ஒப்புதலளிக்கப்பட்டுள்ளது.

**தணிக்கை நிலை**

51. 2021-2022 ஆம் ஆண்டிற்கான அனைத்து ஊராட்சி ஒன்றியங்கள், மாவட்ட ஊராட்சிகள், மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகள், பல்கலைக்கழகங்கள் மற்றும் இதர நிறுவனங்களின் தணிக்கை முடிவுற்றுள்ளது. 2021-22 ஆம் ஆண்டிற்கான கிராம ஊராட்சிகளின் 22% சோதனைத் தணிக்கை முடிவுற்றது.

**தணிக்கைக் கட்டணம்**

52. பல்கலைக் கழகத் தணிக்கைக்கு 100% தணிக்கைச் செலவினம் தணிக்கைக் கட்டணமாகவும், மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகள் தணிக்கைக்கு 50% தணிக்கைச் செலவினம் தணிக்கைக் கட்டணமாகவும், வேளாண் விற்பனை குழுக்கள் தணிக்கைக்கு மொத்த செலவினத்தில் 2 சதவீதமும் இத்துறையால் வசூலிக்கப்படுகிறது. 01.04.2022 முதல் 31.03.2023 வரை நடப்பு நிதியாண்டில், கேட்பு தொகையான 6265.03 இலட்சம் ரூபாயில் மேற்படி

நிறுவனங்களால் தணிக்கைக் கட்டணமாக 3248.04 இலட்சம் செலுத்தப்பட்டுள்ளது.

**தணிக்கைத் தடைகள் நீக்கம் சார்பான தொகை பிடித்தம்**

53. பேரூராட்சிகள், நகராட்சிகள், மாநகராட்சிகள், பல்கலைக்கழகங்கள் மற்றும் பிற நிறுவனங்களில் நடப்பு நிதியாண்டில் 81729 தணிக்கைத் தடைகளை நீக்கம் செய்த வகையில் 5734.77 இலட்சம் வசூலிக்கப்பட்டுள்ளது.

## கூட்டுறவுத் தணிக்கைத் துறை

54. சந்தானம் குழு மற்றும் நிருவாக சீர்திருத்த ஆணையத்தின் பரிந்துரைகளின்படி கூட்டுறவு தணிக்கை துறையானது 17.06.1981 முதல் தனித் துறையாக செயல்பட்டு வருகிறது. தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டம் 1983 இன் 80-வது பிரிவின்படி பன்மாநில கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் பால் கூட்டுறவுச் சங்கங்கள் தவிர, 14 நிருவாக பதிவாளர்கள் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் அனைத்து கூட்டுறவுச் சங்கங்களின் சட்டபூர்வ தணிக்கையை மேற்கொள்வதே இத்துறையின் முக்கியமான பணியாகும்.

55. கூட்டுறவுத் தணிக்கைத் துறையின் தணிக்கை வரம்பிற்கு உட்பட்ட நிருவாகப் பதிவாளர்களின் கட்டுப்பாட்டிலுள்ள கூட்டுறவுச் சங்கங்களின் விவரங்கள் இணைப்பு 2-இல் உள்ளன.

### கூட்டுறவுத் தணிக்கையின் நோக்கம்

56. கூட்டுறவுச் சங்கங்களின் கணக்குகளை தணிக்கை செய்தல், அச்சங்கங்களின் நிதிநிலை அறிக்கைகள் முறையாக தயாரிக்கப்படுவதையும், அக்கணக்குகள் சங்கங்களின் உண்மையான

மற்றும் தெளிவான நிலவரத்தைப் பிரதிபலிக்கும் வகையிலும் தயாரிக்கப்பட்டுள்ளனவா என்பதையும் உறுதிப்படுத்துவது கூட்டுறவு தணிக்கைத் துறையின் முதன்மைப் பணியாக உள்ளது. மேலும், தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம் 1983, தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்களின் விதிகள் 1988, சங்கங்களின் துணை விதிகள் மற்றும் அரசு வழிகாட்டுதல்களின்படி செயல்படுவதை உறுதி செய்கிறது. அரசின் மானியம், உதவித்தொகைகள் மற்றும் நிதியுதவி முறையாக பயன்படுத்தப்படுவதையும், பலன்கள் உறுப்பினர்களுக்கும் சமூகம் முழுமைக்கும் சென்றடைகின்றனவா என்பதையும் உறுதி செய்கிறது.

**நகர வங்கிகள் மற்றும் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகளில் உடன்நிகழ் தணிக்கை மேற்கொள்ளுதல்:**

57. அனைத்து மத்திய கூட்டுறவு வங்கிகள் மற்றும் நகர கூட்டுறவு வங்கிகளின் சட்டப்பூர்வ தணிக்கை, பட்டயக் கணக்காளர்கள் வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. கூட்டுறவு தணிக்கைத் துறையைச் சேர்ந்த தணிக்கையாளர்களுக்கு

மேற்குறிப்பிட்ட வங்கிகளின் உடன் நிகழ் தணிக்கைப் பணிகள் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

**சட்டப் பூர்வ தணிக்கை மற்றும் தணிக்கைக் கட்டணம்**

58. தொடக்க கூட்டுறவு சங்கங்களின் சட்டப் பூர்வ தணிக்கை, 45 நாட்களுக்குள் முடிக்கப்படவேண்டும். தணிக்கை மேற்கொள்ளும் காலத்திற்கு தணிக்கைக் கட்டணம் சம்பந்தப்பட்ட கூட்டுறவுச் சங்கங்களிடமிருந்து வசூலிக்கப்பட்டு அரசுக் கணக்கில் செலுத்தப்படுகிறது.

அடிப்படைவிதி 127-ன்படி அதிக அளவிலான வணிக நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பெரிய கூட்டுறவுச் சங்கங்களில், அதாவது தணிக்கைக்கு 45 மனித நாட்களுக்கு மேல் தேவைப்படும் நேர்வில் முழுநேர தணிக்கையாளர்கள் நியமனம் செய்யப்பட்டு தணிக்கை மேற்கொள்ளப்படுகிறது. அரசாணை (நிலை) எண்.27, நிதி (கூட்டுறவுத் தணிக்கை)த் துறை, நாள் 12.02.2020-ன்படி இத்தணிக்கைக்கு கட்டணமாக 35 சதவீத சம்பளத் தொகை சங்கங்களிடமிருந்து வசூலிக்கப்படுகிறது.

**தணிக்கை முன்னேற்ற நிலை**

59. கூட்டுறவுச் சங்கங்களின் கணக்குகள் ஏப்ரல் 1 முதல் மார்ச் 31 வரையிலான நிதியாண்டிற்கு உரியதாகும். எனவே அந்நிதியாண்டு முடிந்த பின்னரே தணிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதன்படி 2020-2021 -ஆம் ஆண்டிற்கான மொத்தம் உள்ள 13,573 சங்கங்களில் 5900 கூட்டுறவு சங்கங்களின் தணிக்கை 2021-2022 ஆம் ஆண்டில் முடிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள கூட்டுறவு சங்கங்களின் தணிக்கை 31.07.2023-க்குள் முடிக்கப்படும். தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம் 1983 இன் பிரிவு 81-ன் கீழ் விசாரணையில் உள்ளவை, வணிக குற்றப் புலனாய்வுத் துறை விசாரணையில் உள்ளவை, நீதிமன்ற வழக்கு காரணமாக புத்தகங்கள் கிடைக்கப் பெறாதவை, மற்றும் கணக்கு எழுதப்படாமல் உள்ளவை போன்ற காரணங்களினால் 2020-2021-ஆம் ஆண்டுவரை சில சங்கங்களின் தணிக்கை நிலுவையாக உள்ளது. இச்சங்கங்களின் தணிக்கையை முடிக்க சம்பந்தப்பட்ட நிர்வாகத்துறை அலுவலர்களின் ஒருங்கிணைப்புடன் முடிக்க முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**தனியறிக்கைகள்** (Special Reports)

60. தணிக்கையில் கையாடல், மோசடி, கூட்டுறவு சங்கங்களின் சட்டம் மற்றும் விதி மீறல், இருப்புக் குறைவு ஆகிய கடுங்குறைகள் கண்டறியும் போது அனைத்து விவரங்களும் தனி அறிக்கைகள் மூலம் சம்பந்தப்பட்ட நிருவாகப் பதிவாளருக்கு தொடர் நடவடிக்கை மேற்கொள்ள உடன் தெரிவிக்கப்படுகிறது. அரசாணை எண்.267, நிதி(கூட்டுறவுத் தணிக்கை)த் துறை, நாள்.06.08.2018-ன் படி தனியறிக்கைகள் மீது நிருவாக பதிவாளர்களால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை விவரம் 2017-2018 ஆண்டுக்கு அறிக்கையாக அரசுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. 2018-2019ம் ஆண்டிலிருந்து நிருவாக பதிவாளர்கள் மேற்கொண்ட நடவடிக்கை குறித்த விவரம் எதிர் நோக்கப்பட்டுள்ளது.

இரண்டு ஆண்டுகளுக்கான தனியறிக்கை விவரம் பின் வருமாறு:

| வருடம் | தனி அறிக்கைகள் எண்ணிக்கை | தொகை (ரூபாய் கோடியில்) |
|---|---|---|
| 2021-2022 | 387 | 49.99 |
| 2022-2023 | 289 | 44.51 |

**பயிற்சி மற்றும் வளர்ச்சி**

61. தணிக்கையாளர்களின் திறமை மற்றும் தணிக்கையின் தரம் இவற்றை மேம்படுத்த பல்வேறு வகையான குறுகியகால பயிற்சி மற்றும் புத்தாக்கப் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன.

## மாநில அரசு தணிக்கைத் துறை

62. அரசு வணிகத் திட்டங்கள் தணிக்கைத் துறை 1969-ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டு, அரசாணை எண் 598, நிதி (உள்ளாட்சி நிதி)த் துறை, நாள் 03.08.1992-ன் படி நடைமுறையில் இருந்த உள்ளாட்சி நிதித் தணிக்கை மற்றும் அரசு வணிகத் திட்டங்கள் துறைகளின் பணிகள் திருத்தி அமைக்கப்பட்டு அரசுத் துறைகளிலும் உட்தணிக்கை மேற்கொள்ளும் வகையில் அரசுத்துறை நிறுவனத் தணிக்கைத் துறையாக செயல்பட்டு வந்தது. பின்னர், இத்துறையின் பணி மற்றும் கடமைகள் திருத்தியமைக்கப்பட்டு தனிச் சட்டங்களின் கீழ் உருவாக்கப்பட்ட மற்றும் உருவாக்கப்படாத நிறுவனங்களின் தணிக்கை, அரசுத் துறைகளின் உட்தணிக்கை மற்றும் அரசின் நிதியுதவி பெறும் பல்வேறு அரசுத் துறை நிறுவனங்களின் தணிக்கை, வாரியங்களின் திட்ட தணிக்கைகள் இத்துறையால் மேற்கொள்ளப்பட்டு வருவதை கருத்திற் கொண்டு அரசுத்துறை நிறுவனத் தணிக்கைத் துறையின் பெயர் 'மாநில அரசுத் தணிக்கைத் துறை' என அரசாணை எண்.264 நிதி(உள்ளாட்சி நிதி)த் துறை,

நாள்.16.08.2019-ன் வழி மாற்றம் செய்யப்பட்டு செயல்பட்டு வருகின்றது.

## 63. தணிக்கையின் செயற்பரப்பு

- தணிக்கை நிறுவனங்களின் அனைத்து வரவு மற்றும் செலவினங்களை முறையான ஆய்வு மற்றும் தணிக்கை மேற்கொள்ளுதல்.
- தணிக்கை நிறுவனங்களில் அனைத்து நிதி பரிவர்த்தனைகள் மற்றும் நிலையான ஒழுங்குமுறைகள் மற்றும் உரிய விதிமுறைகள் சரியாக பின்பற்றப்படுவது தொடர்பான கண்காணிப்புகளை உறுதிபடுத்துதல்.
- வாரிய பணியாளர்களின் ஓய்வூதியப் பயன்கள் (ம) பொது வருங்கால வைப்பு நிதி/சிறப்பு சேமநல நிதித் திட்டம் இறுதி இருப்புத் தொகைகள் ஆகியவற்றினை உறுதி செய்து தணிக்கைச் சான்று வழங்குதல்.
- வாரியங்கள் / நிறுவனங்களின் தணிக்கை தடைகளில் உள்ள கடுங்குறைபாடுகள்

குறித்த அறிக்கையினை தொடர்ந்து கண்காணிக்க பொது நிறுவனங்கள் குழுவில் இறுதி தீர்மானம் நிறைவேற்றுதல்.

**தணிக்கைக்குட்பட்ட நிறுவனங்கள்**

64. இத்துறையால் தணிக்கை செய்யப்படும் முக்கியமான நிறுவனங்கள் மற்றும் திட்டங்களின் விவரங்கள் இணைப்பு – 3-இல் உள்ளது.

மேற்கண்ட சட்டபூர்வ வாரியங்களின் ஆண்டுத் தணிக்கை உடனிகழ் தணிக்கையாக மேற்கொள்ளப்பட்டு, அத்தணிக்கை அறிக்கைகள், நிர்ணயிக்கப்பட்ட கால அளவிற்குள் வெளியிடப்படுவதுடன் அவற்றிலுள்ள பல்வேறு கடுங்குறைபாடுகள் குறித்த விவரங்கள் அரசுக்கும் தமிழ்நாடு சட்டசபையின் பொது நிறுவனங்கள் குழுவின் கவனத்திற்கும் கொண்டு செல்லப்படுகின்றன.

**தணிக்கைச் சான்று**

65. மானியம் பெறும் நிறுவனங்களுக்கு மானியத் தகுதிச் சான்று இத்துறையால் அளிக்கப்பட்டு வருகிறது. மேலும், தணிக்கைக்கு

உட்பட்ட வாரியங்களில் பணியாற்றும் பணியாளர்களின் ஓய்வூதியக் கருத்துருக்கள் மற்றும் வருங்கால வைப்பு நிதி கணக்கு முடிப்புகளுக்கு தணிக்கைச் சான்று இத்துறையால் அளிக்கப்பட்டு வருகிறது.

**இதர பணிகள்**

66. அரசின் குறிப்பான ஆணையின்படி தற்போது 19 அரசுத் துறைகளின் உட்தணிக்கைப் பணிகள் இத்துறையால் மேற்பார்வை செய்யப்பட்டு தணிக்கை அறிக்கைகள் வெளியிடப்பட்டு வருகின்றன.

1. மருத்துவக் கல்வித்துறை
2. மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் துறை
3. பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத் துறை
4. வேளாண்மைத் துறை
5. வேளாண்மை பொறியியல் துறை
6. புவியியல் மற்றும் சுரங்கத்துறை
7. வருவாய் நிருவாகத் துறை
8. போக்குவரத்துத்துறை
9. கல்லூரி கல்வித்துறை
10. தொழில்நுட்பக் கல்வித்துறை

11. சிறை மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறை
12. காவல்துறை
13. சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை
14. அகதிகள் மறுவாழ்வுத்துறை
15. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை
16. வனத்துறை
17. எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை
18. பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை
19. தீயணைப்பு மற்றும் மீட்பு பணித்துறை

**தணிக்கை அறிக்கை மீதான தொடர் நடவடிக்கை**

67. தணிக்கையின் போது காணப்படும் கடுங்குறைபாடுகள் கொண்ட பத்திகளின் சுருக்கம் நடவடிக்கைக்காக அந்தந்த துறைத் தலைவர்களுக்கும் மற்றும் அரசின் துறை செயலாளரின் கவனத்திற்கும் அனுப்பி வைக்கப்படுகின்றது.

**2022-2023-இல் நடத்தப்பட்ட சிறப்புத் தணிக்கைகள்**

68. இத்துறையால் 2022-2023-இல் கீழ்க்காணும் சிறப்புத் தணிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

(i) அரசுக் கடிதம் எண்.56431/நிதி(உ.நி)/2021, நாள்.31.01.2022-இன் வழி அரசால் ஆணையிடப்பட்டவாறு பி.வ. / மி.பி.வ. / சிறும்பான்மையினர் / ஆ.தி / ப.கு மாணவர்களுக்கு கல்வி உதவி தொகை திட்டம் தொடர்பாக வழங்கப்பட்ட வருமானச் சான்றிதழ் மற்றும் முதல் பட்டதாரி சான்றிதழின் உண்மைத் தன்மை சரிபார்த்தல் தொடர்பான களஆய்வு, மேற்கொள்ளப்பட்டு அரசுக்கு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது.

(ii) கோவிட்-19 வரவு மற்றும் செலவினத் தணிக்கை தேர்ந்தெடுக்கப்பட்ட 5 மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்டு அரசிற்கு தணிக்கை அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது.

**தணிக்கைக் கட்டணம்**

69. உண்மைச் செலவினம் அல்லது சராசரி செலவுகளின் அடிப்படையில் தணிக்கை கட்டணத்திற்கான கேட்பு எழுப்பப்படுகிறது. 2022-2023-ஆம் ஆண்டிற்கு 545.93 இலட்சம் ரூபாய் தணிக்கை கட்டணமாக வசூலிக்கப்பட்டுள்ளது.

**தணிக்கைத் தடைகள் நீக்கம் சார்பான தொகை பிடித்தம்**

70. கூட்டமர்வின் வாயிலாக, பல்வேறு தணிக்கை நிறுவனங்களின் தணிக்கை அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட அரசுக்கு வருவாய் இழப்புகளை உருவாக்கும் இனங்களின் 35593 தணிக்கைத் தடைகள் நீக்கம் செய்யப்பட்டு 1568.48 இலட்சம் ரூபாய் வசூலிக்கப்பட்டு அரசு கணக்கில் செலுத்தப்பட்டுள்ளது.

**திறன் மேம்படுத்துதல்**

71. இத்துறையின் தணிக்கையாளர்களின் திறமை மற்றும் தணிக்கையின் தரத்தினை மேம்படுத்த பல்வேறு தணிக்கை நிறுவனங்களின் தணிக்கை நடைமுறை குறித்து வருடந்தோறும் மூன்று நாட்களுக்கு தணிக்கையாளர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

தலைமை தணிக்கை இயக்குநரால் உருவாக்கப்பட்ட பயிற்சி ஆலோசனை குழு (Training Advisory Committee)-இன் வழிகாட்டுதல்களின்படி 2022-2023 ஆண்டிற்கான பயிற்சி நாட்காட்டி (Annual Training Calendar) தயாரிக்கப்பட்டு

வருகின்றது. கீழ்க்கண்ட தலைப்புகளில் பயிற்சி அளிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

i. பொது தலைப்புகள் (General Courses)
ii. தகவல் தொழில்நுட்பம் தொடர்பான தலைப்புகள் (IT related Courses)
iii. துறைச்சார்ந்த தலைப்புகள் (Domain Based Courses)

## 72. மின்ஆளுமை முயற்சிகள்

1. இத்துறைக்கான தனி வலைமுகப்பு உருவாக்கப்பட்டு வருகிறது.
2. இத்துறையின் செயல்பாடுகளை மின்னணுமயமாக்குவதற்காக ஒரு தரவு மேலாண்மை மற்றும் பகுப்பாய்வுப் பிரிவு தோற்றுவிக்கப்படவுள்ளது.


## பால் கூட்டுறவுகளின் தணிக்கைத்துறை

73. பால் கூட்டுறவுச் சங்கங்களின் சட்டப்பூர்வ தணிக்கைப் பணியினை மேற்கொள்ள, பால் கூட்டுறவுகளின் தணிக்கைத்துறை கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத்துறை நிருவாக கட்டுப்பாட்டின் கீழ் 1987ம் ஆண்டு தனித்துறையாக உருவாக்கப்பட்டது.

74. அரசாணை (நிலை) எண்.370, நிதி (கூட்டுறவுத் தணிக்கை)த் துறை, நாள் 22.11.2019 வாயிலாக இத்துறை நிதித்துறையின் நிருவாகக் கட்டுப்பாட்டின் கீழ் தனித்துறையாக செயல்படுகிறது.

### பால் கூட்டுறவுச் சங்கங்களின் அமைப்பு

75. தமிழ்நாட்டில் பால் கூட்டுறவுச் சங்கங்கள் மூன்று அடுக்கு அமைப்பாக, மாநில அளவில் தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையம், மாவட்ட அளவிலான 27 மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்கள், தொடக்க நிலையில் 10518 பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் 47 நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன.




**பால் கூட்டுறவுத் தணிக்கைத் துறையின் நோக்கம்**

76. பால் கூட்டுறவுச் சங்கங்களின் கணக்குகளை தணிக்கை செய்தல், அச்சங்கங்களின் இருப்புநிலைக் குறிப்பு மற்றும் இலாப நட்டக் கணக்குகள் முறையாக தயாரிக்கப்படுவதையும், அக்கணக்குகள் சங்கங்களின் உண்மையான மற்றும் தெளிவான நிலவரத்தைப் பிரதிபலிக்கும் வகையிலும் தயாரிக்கப்பட்டுள்ளனவா என்பதையும் உறுதிப்படுத்துவது பால் கூட்டுறவுத் தணிக்கைத்துறையின் முதன்மைப் பணியாக உள்ளது.

மேலும் பால் கூட்டுறவு சங்கங்களின் நிதிநிலை அறிக்கை மற்றும் தணிக்கை அறிக்கையை பயன்படுத்தும் சங்க உறுப்பினர்கள் மற்றும் பங்குதாரர்களுக்கு போதுமான நம்பகத் தன்மையை தணிக்கைத்துறை உறுதி செய்கிறது.

**தணிக்கை முன்னேற்றம்**

**தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம்**

77. தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்தின் 2021-2022 தணிக்கையாண்டிற்கான இறுதித் தணிக்கை 10 அலகுகளிலும் நிறைவு பெற்று தணிக்கைச் சான்று வழங்கப்பட்டுள்ளது.

**மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்கள்**

78. 2020-2021 ஆம் தணிக்கையாண்டிற்கு மொத்தமுள்ள 25 மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களில் 23 ஒன்றியங்களில் தணிக்கை முடிக்கப்பட்டுள்ளது. 21 ஒன்றியங்களுக்கு தணிக்கைச் சான்று வழங்கப்பட்டு தருமபுரி, நாமக்கல் ஆகிய இரு ஒன்றியங்களில்

தணிக்கை அறிக்கை இறுதியாக்கம் பணி முன்னேற்றத்தில் உள்ளது. எஞ்சியுள்ள, 2 ஒன்றியங்களில் திருப்பூர் மற்றும் திருவண்ணாமலை ஒன்றியங்களில் தணிக்கைப்பணி முன்னேற்றத்தில் உள்ளது.

79. 2021-2022-ஆம் தணிக்கையாண்டிற்கு 19 மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களில் தணிக்கை முடிக்கப்பட்டு தணிக்கைச் சான்று வழங்கப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள ஒன்றியங்களில் தணிக்கைப்பணி முன்னேற்றத்தில் உள்ளது.

**பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள்**

80. 2021-2022-ஆம் ஆண்டில் மொத்தமுள்ள 10565 தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களில் 6122 சங்கங்களின் தணிக்கை முடிக்கப்பட்டு 3615 சங்கங்களுக்கு தணிக்கைச் சான்றுகள் வழங்கப்பட்டுள்ளன. 2507 சங்கங்களில் தணிக்கைச் சான்று வழங்கும் பணி முன்னேற்றத்தில் உள்ளது. எஞ்சியுள்ள சங்கங்களில் தணிக்கை திட்டத்தின்படி தணிக்கைப்பணி நடைபெற்று வருகிறது.

## தணிக்கைக் கட்டணம் மற்றும் அடிப்படைவிதிக் கட்டணம்

81. 2021-2022-ஆம் நிதியாண்டில் உடன்நிகழ் தணிக்கைக் கட்டணமாக 153.47 இலட்ச ரூபாயும், அடிப்படைவிதி கட்டணமாக 188.12 இலட்ச ரூபாயும் பால் கூட்டுறவு சங்கங்களிலிருந்து வசூலிக்கப்பட்டு ஆக மொத்தம் 341.59 இலட்சம் ரூபாய் அரசுக்கணக்கில் செலுத்தப்பட்டுள்ளது.

## தனியறிக்கை

82. தணிக்கையில் காணப்படும் கடுங்குறைகள் மற்றும் நிதி சார்ந்த அனைத்து விவரங்களும் தனியறிக்கைகள் மூலம் இயக்குநர், பால் உற்பத்தி மற்றும் பால் பண்ணை மேம்பாட்டுத்துறை மற்றும் பால் வளத்துறை துணைப்பதிவாளர்களுக்கு உரிய நடவடிக்கைக்காக அனுப்பப்படுகிறது.

## பயிற்சி மற்றும் மேம்பாடு

83. பால் கூட்டுறவு தணிக்கைத்துறையின் தணிக்கையாளர்களுக்கு, துறை சார்ந்த அறிவு மற்றும் திறனை மேம்படுத்துவதற்காக அரசின்

நிதியுதவியுடன் ஒவ்வொரு ஆண்டும் புத்தாக்கப் பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது.

2022-2023ம் ஆண்டில் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களின் தணிக்கை தொடர்பாக பல்வேறு தணிக்கை சார்ந்த இனங்களில் 150 முதுநிலை கூட்டுறவு தணிக்கையாளர்களுக்கு குறுகிய கால பயிற்சி அளிக்கப்பட்டது.

இத்துறை தணிக்கையாளர்களின் தணிக்கைத் திறனை அதிகரிக்க உரிய பயிற்சி திட்டம் வகுக்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. துறை அளவில் அமைக்கப்பட்ட பயிற்சி திட்டக்குழு நடசேன் கூட்டுறவு மேலாண்மை பயிற்சி நிறுவனம்(NICM), சென்னை, கூட்டுறவு மேலாண்மை பயிற்சி நிலையம், மதுரை, மண்டல பயிற்சி நிலையம் (மாநில கணக்காயர் அலுவலகம்), மற்றும் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் (TANUVAS) ஆகியவற்றுடன் இணைந்து 2023-2024ம் ஆண்டிற்கான வருடாந்திட பயிற்சி அட்டவணை, ஒவ்வொரு பயிற்சிக்கும் நிலையான பயிற்சி தொகுதி மற்றும் புதிதாக நியமனம் செய்யப்படும்

தணிக்கையாளர்களுக்கு அடிப்படை பட்டய பயிற்சி ஆகியவற்றை தயாரித்து வருகிறது.

**துறையின் புதிய முயற்சிகள்**

**பால் கூட்டுறவுகளின் தணிக்கைத்துறை கையேடு**

84. பால் கூட்டுறவுகளின் தணிக்கைத் துறையின் வரைவு கையேடு தயாரிக்கும் பணி முடிக்கப்பட்டுள்ளது. விரைவில் இறுதி செய்யப்பட்ட பால் கூட்டுறவுகளின் தணிக்கை கையேடு தணிக்கையாளர்களுக்கு வழங்கப்படும்.

**தணிக்கைத் தரம் உயர்த்துதல்**

85. பால் கூட்டுறவுகளின் தணிக்கை தரத்தை உயர்த்துவதற்காக துறை அளவில் தணிக்கைத் திட்டக்குழு அமைக்கப்பட்டுள்ளது. இக்குழு 2023-2024, 2024-2025 மற்றும் 2025-2026 ஆகிய மூன்று வருடங்களுக்கான முன்னோக்கு தணிக்கை திட்டம் தயாரித்தல், 2023-2024ஆம் ஆண்டுக்கான தணிக்கை திட்டம் தயாரித்தல், செயல்திறன் தணிக்கை / இணக்க தணிக்கை மேற்கொள்ள தணிக்கை தலைப்புகள் தேர்வு செய்தல் மற்றும் தணிக்கை வடிவமைப்பு மாதிரி (Audit Design Matrix) தயாரித்தல் ஆகிய பணிகளை மேற்கொண்டு வருகிறது.

## இந்து சமய அறநிறுவனங்களின் தணிக்கைத் துறை

86. இந்து சமய அறநிறுவனங்களின் வரவு செலவு கணக்குகளை தணிக்கை செய்திட இந்து சமய அறநிறுவனங்களின் கட்டுப்பாட்டில் செயல்பட்டுவந்த தணிக்கை பிரிவு அரசாணை (நிலை) எண்.181, சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை, நாள் 25.11.2021-ன்படி இந்து சமய அறநிலையத்துறையிலிருந்து விடுவிக்கப்பட்டு இந்து சமய அறநிறுவனங்களின் தணிக்கைத் துறை என தனித்துறையாக நிதித்துறையின் நிருவாகக் கட்டுப்பாட்டில் செயல்படும் வகையில் மாற்றியமைக்கப்பட்டது.

87. தமிழ்நாடு முழுவதுமுள்ள இந்து சமய நிறுவனங்களின் தணிக்கையினை மேற்கொள்ள இத்துறை 19 மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு அவற்றுள் 4 மண்டலங்களில் துணை தலைமைத் தணிக்கை அலுவலர் தலைமையிலும் மற்றும் 15 மண்டலங்களில் மண்டல தணிக்கை அலுவலர் தலைமையிலும் தணிக்கை நடைபெற்று வருகிறது. அவர்களுக்கு உதவியாக 27 உதவி தணிக்கை அலுவலர்கள் உள்ளனர். இதனைத் தவிர்த்து ஒரு

மண்டலத் தணிக்கை அலுவலரும் (நடமாடும் தணிக்கைக் குழு), ஒரு உதவி தணிக்கை அலுவலரும் தலைமையிடத்தில் பணிபுரிந்து வருகின்றனர்.

88. ஒவ்வொரு பசலி ஆண்டிலும் அனைத்து தணிக்கை மண்டலங்களுக்கும் மனித நாட்கள் மற்றும் தணிக்கை நிலுவைகளை அடிப்படையாக கொண்டு குறியீடு நிர்ணயம் செய்யப்பட்டு தணிக்கை பணி நடைபெற்று வருகிறது. ஒவ்வொரு திருக்கோயிலின் வருவாய்கேற்ப திருக்கோயில்கள் இனம் வாரியாக பிரிக்கப்பட்டு தணிக்கை பணி நடைபெற்று வருகிறது.

அரசு திட்டங்களான ஒரு காலபூஜை, அன்னதானம் மற்றும் கல்வி நிறுவனம், திருப்பணி ஆகிய இதர கணக்குகளும் தணிக்கை செய்யப்படுகின்றன.

89. 2022-2023 ஆம் ஆண்டில், ஒதுக்கப்பட்ட மனித நாட்களைக் கொண்டு, இந்து சமய நிறுவனங்களின் தணிக்கை மெற்கொள்ளப்பட்டு, அதிக ஆண்டு வருமானம் உள்ள குறிப்பிடத்தக்க

நிறுவனங்களுக்கு சிறப்பு முக்கியத்துவம் அளித்து கீழ்கண்டவாறு முடிக்கப்பட்டுள்ளது.

| வ. எண் | பிரிவு | 2022-2023 ஆம் ஆண்டில் தணிக்கை முடிக்கப்பட்ட பசலிகள் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | சிறப்பு நிலை – 1 | 7 |
| 2 | சிறப்பு நிலை – 2 | 5 |
| 3 | சிறப்பு நிலை – 3 | 23 |
| 4 | பிரிவு - 1 | 580 |
| 5 | பிரிவு - 2 | 490 |
| 6 | பிரிவு – 3 | 944 |
| 7 | பிரிவு – 4 | 1819 |
| 8 | பிரிவு - 5 | 2875 |
| 9 | அன்னதானத் திட்டம் | 1115 |
| 10 | ஒரு கால பூஜை | 30944 |
| 11 | கல்வி நிறுவைங்கள் | 211 |
| 12 | திருப்பணி | 68 |
| 13 | கிராமப்புர திருப்பணி | 31 |
| 14 | பலவகை | 14 |
| | **மொத்தம்** | 39126 |

# கருவூலக் கணக்குத் துறை

## 90. முகவுரை

கருவூலங்கள் அரசாங்கத்தின் பழமையான செயல்பாட்டு அலகுகளில் ஒன்றாகும். முதலில் அவை ஆட்சியர் அலுவலகங்களின் ஒரு பகுதியாக செயல்பட்டன. 01.04.1962-இல் அவை தனித் துறையாக மறுசீரமைக்கப்பட்டு நிதித் துறையின் நிருவாகக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டன.

கருவூல கணக்குத் துறையானது, கருவூலக் கணக்கு ஆணையரை துறைத் தலைவராகக் கொண்டு நிதித்துறையின் நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ் 6 மண்டல இணை இயக்குநர் அலுவலகங்கள், 6 சம்பளக் கணக்கு அலுவலகங்கள், 3 சார்-சம்பளக் கணக்கு அலுவலகங்கள், 38 மாவட்டக் கருவூலங்கள், 1 ஓய்வூதியம் வழங்கும் அலுவலகம், 1 உதவி முத்திரைத் தாள் கண்காணிப்பாளர் அலுவலகம் மற்றும் 243 சார் கருவூலங்களுடன் கருவூலம் தொடர்பான பணிகளை மேற்கொண்டு வருகின்றன. கருவூல கணக்குத் துறை அரசின் நிதி தொடர்பான பல்வேறு கருவூல செயல்பாடுகளை செய்கிறது. மேலும், நிதி தொடர்பான

செயல்பாடுகளை செய்வதற்காக பல்வேறு துறைகள், வாரியங்கள் மற்றும் பெருநிறுவனங்களுக்கு தேர்ந்த மனிதவளத்தை வழங்குகிறது.

### 91. முதன்மைப் பணிகள்

1) அரசின் அனைத்து வரவு செலவுகளை கையாளுதல்
2) 9.3 இலட்சத்திற்கும் மேலான பணியாளர்களுக்கு சம்பளம் வழங்குதல்
3) 7.07 இலட்சத்திற்கும் மேலான ஓய்வூதியர்களுக்கு ஓய்வூதியம் வழங்கல்
4) அரசின் திட்டம் மற்றும் மூலதன பணிகளுக்கான பட்டியல்களுக்கு பணம் வழங்குதல்
5) மாதாந்திர கணக்குகளை மாநிலக் கணக்காயருக்கு அனுப்புதல்
6) விற்பனையாளர்களுக்கு நீதி / நீதிசாரா முத்திரைத்தாள்கள் விற்பனை செய்வது.
7) பணியாளர்கள் மற்றும் ஓய்வூதியர்களின் நலனுக்காக புதிய மருத்துவ காப்பீட்டு திட்டத்தை செயல்படுத்துதல்.
8) பணம் பெறும் அலுவலர்களின் தன் வைப்பு கணக்குகளையும், தலநிதிக்கான பல்வேறு வைப்பு கணக்குகளையும் பராமரித்தல்.

## 92. ஒருங்கிணைந்த நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் திட்டம் (IFHRMS)

- ஒருங்கிணைந்த நிதி மற்றும் மனித வள மேலாண்மைத் திட்டம், நிதி மற்றும் மனித வள மேலாண்மையை ஒருங்கிணைத்து, அரசின் செயல்திறன் மிக்க மற்றும் திறமையான செயல்பாட்டிற்கு உதவும் முன்னோடித் திட்டமாகும். இத்திட்டம் ஜனவரி 2021 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டு, மனிதவள செயல்பாடுகள், பட்டியல்கள் உருவாக்கம் போன்ற பல்வேறு நடவடிக்கைகளில் நேரடி பயன்பாட்டில் உள்ளது.

- பொதுமக்கள், அரசு துறை நிறுவனங்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகள் அரசின் வரவினங்களை மின்- வரவினங்களாக செலுத்த ஏதுவாக 08.02.2021 அன்று மின் செலுத்துச்சீட்டு (e-Challan) முறை நடைமுறைப்படுத்தப்பட்டு (e-Receipt) 24x7 மணிநேரமும் தங்குதடையின்றி (www.karuvoolam.tn.gov.in) இணையதளம் மூலம் செலுத்த வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

- காப்பறை மற்றும் முத்திரைத் தாள் மேலாண்மை சார்ந்த வசதிகள் IFHRMS-ல் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

- சென்னை ஓய்வூதியம் வழங்கும் அலுவலகம் மற்றும் அனைத்து மாவட்ட கருவூலங்களில் ஓய்வூதியம் வழங்கும் பணிகள் நடைபெறுகின்றன.

- ஓய்வூதியதாரர்கள் மற்றும் அவருடைய வாரிசு தாரர்களுக்கு IFHRMS வாயிலாக பணப்பட்டுவாடா செய்யப்படுகிறது.

- மாதந்தோறும் 32.8 இலட்சம் பயனாளிகளுக்கு முதியோர் ஓய்வூதியம் (Old Age Pension) IFHRMS வாயிலாக வழங்கப்பட்டு வருகிறது.

- டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி மகப்பேறு நலத்திட்டத்தின் கீழ் 6.50 இலட்சம் பயனாளிகளுக்கு IFHRMS வாயிலாக நிதி உதவி வழங்கப்படுகிறது.

- மாணவர்களுக்கு கல்வி உதவித் தொகை மூவலூர் இராமாமிர்தம் அம்மையார்

உயர்கல்வி உறுதி - புதுமைப் பெண் திட்டத்தின் கீழ் அறிமுகப்படுத்தப்பட்டு, மாநிலம் முழுவதும் IFHRMS வாயிலாக செயல்படுத்தப்படுகிறது.

- ஓய்வூதியர்களின் வருடாந்திர நேர்காணலுக்கான (Mustering), வாழ்நாள் சான்றிதழை மின்னணு (Digital Life Certificate) முறையில் சமர்ப்பித்தல் தொடர்பாக ஜீவன் பிரமான் (Jeevan Praman) உடன் ஒருங்கிணைக்கப்பட்டு ஜுலை-2022 முதல் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

- மாநில கணக்காயர் (கணக்குகள் மற்றும் உரிமைகள்) மூலம் மேற்கொள்ளப்படும் கருவூலம் சாரா பரிவர்த்தனைகளை ஒருங்கிணைத்தல்.

- மோசடி நடவடிக்கைகள் மற்றும் இரண்டாம் உள்ளீடுகளைத் (Duplicate Entries) தவிர்க்க, மாதாந்திர அடிப்படையில் பட்டியல்கள் சரிபார்க்கப்படுகின்றன (Validation).

**செயல்படுத்தப்படும் நிலையில் உள்ள திட்டங்கள்**

- ஒருங்கிணைந்த நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் திட்டம் (2.0) களஞ்சியம் எனும் பெயரில் தொழில்நுட்ப கொள்முதல் (Tech Refresh).
- கைப்பேசி செயலியை மேம்படுத்துதல்
- நிதித்துறை மற்றும் அதன் கீழுள்ள துறைகளின் பணியாளர் பணி விவர நிகழ்நேர கையேடு (Online Directory).
- ஓய்வூதிய கருத்துரு மற்றும் பொதுவருங்கால வைப்பு நிதி கருத்துருக்களை நிகழ்நேரம் மூலம் அனுப்புதல் (OPAS).
- மாநில கணக்காயரின் கணக்குகள் மற்றும் தணிக்கை தொடர்பான நடைமுறைகளை (DASS) மின்மயமாக்கல்.
- மின் செலுத்து சீட்டில் (e-Challan) பணம் செலுத்துவதற்குரிய வசதிகளை இந்திய ரிசர்வ் வங்கியின் (RBI) NEFT / RTGS மூலமாக ஏற்படுத்துதல்.
- RBI –ன் 2.0 பதிப்புடன் (Version 2.0) மின் செலுத்துச்சீட்டு முறையை ஒருங்கிணைத்தல்.
- வருமான வரி (Income Tax) துறையுடன் ஒருங்கிணைத்தல்

**புதிய கருவூலங்களின் உருவாக்கம் மற்றும் புதிய கட்டிடங்கள் கட்டுமானம்**

93. தற்போது தமிழ்நாட்டில் 38 மாவட்ட கருவூலங்கள் மற்றும் 243 சார்நிலை கருவூலங்கள் செயல்பட்டு வருகின்றன. பழைய மற்றும் தனியார் கட்டிடங்களில் செயல்பட்டு வரும் 84 சார்நிலை கருவூலங்களுக்கு சொந்த கட்டிடங்கள் கட்ட அனுமதிக்கப்பட்டன. அவற்றில் 78 கட்டிடங்களுக்கான பணிகள் முடிவுற்று செயல்பாட்டில் உள்ளன. 03 கட்டிடங்களுக்கான கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன. எஞ்சியுள்ள 03 சார்கருவூலங்களுக்கான நில மாற்றப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

**தமிழ்நாடு நிதியியல் பகுப்பாய்வு**

94. உள்ளுணர்வைக் காட்டிலும் நம்பகமான, தகவல்களின் அடிப்படையிலான நிதி மேலாண்மைக்கு உதவ, நிதிப் பகுப்பாய்வு அமைப்பை உருவாக்க அரசு முடிவு செய்துள்ளது. நிதி பகுப்பாய்வு முக்கிய பொருளாதார போக்குகள் பற்றிய ஆழமான அறிவைப் பெறுவதற்கும் செயல்திறனை மேம்படுத்தவும் மற்றும் எதிர்காலத்திற்கு திட்டமிடவும் உதவும்.

அமைப்பு ஒருங்கிணைப்பாளர் தேர்ந்தெடுக்கப்பட்டு, தமிழ்நாடு நிதிப் பகுப்பாய்வு அமைப்பின் (TNFAS) வடிவமைப்பு, மேம்பாடு மற்றும் பராமரிப்புக்காக, அரசாணை (நிலை) எண்.377, நிதி (சிறு சேமிப்பு) துறை, தேதி:26/12/2022-ன் படி அரசு நிர்வாக ஒப்புதல் அளித்துள்ளது.

**கருவூலக் கணக்கு துறை, ஓய்வூதிய இயக்குநரகம், சிறு சேமிப்பு இயக்குநரகம் மற்றும் அரசு தரவு மையத்தை மறுசீரமைத்தல்:**

95. IFHRMS மற்றும் பிற சீர்திருத்தங்களை அறிமுகப்படுத்தியதன் காரணமாக நிதித் துறையின் நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ் வரும் துறைகளுக்கான பணிச்சுமை மற்றும் பணி ஓட்டம் மாறியுள்ளது. எனவே, கருவூலக் கணக்குத் துறை, ஓய்வூதிய இயக்குநரகம், அரசு தரவு மையம் மற்றும் சிறுசேமிப்புத் துறை ஆகிய துறைகளின் செயல்திறனை மேம்படுத்தும் வகையில் மறுசீரமைக்கப்பட வேண்டும்.

மறுசீரமைப்பு பணிக்காக அரசாணை எண்.49, நிதி (க.க-3) துறை, தேதி: 22.02.2023-ல் அரசு நிர்வாக அனுமதி வழங்கியுள்ளது. இதற்கான

ஆய்வை மேற்கொள்ள நிறுவனம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

## கருவூல கையேடுகள் மற்றும் விதித் தொகுப்புகளை திருத்தம் செய்தல்

96. தமிழ்நாடு கருவூல விதித் தொகுப்பு, கணக்கு விதித் தொகுப்பு, கருவூலக் கையேடு மற்றும் கருவூலக் கணக்குத் துறையின் ஊதியம் மற்றும் கணக்குக் கையேடு ஆகியவற்றில் உள்ள விதிகளை திருத்தம் செய்வதற்கு, இந்திய பட்டயக் கணக்காளர்கள் நிறுவனத்தை (ICAI) ஈடுபடுத்தி, இப்பணியை மேற்கொள்ள அரசு இந்திய பட்டய கணக்காளர்கள் நிறுவனத்தின் கணக்கியல் ஆராய்ச்சி அறக்கட்டளைக்கு (ICAI ARF) அரசாணை (நிலை) எண்.101, நிதி (க.க-3)த்துறை, நாள் 03.04.2023-ல் ஒப்புதல் அளித்துள்ளது.

## பொது நிதி மேலாண்மை திட்டம்

97. பொது நிதி மேலாண்மை திட்டத்தின் வாயிலாக, ஒன்றிய அரசின் நிதியுதவி பெறும் நலத்திட்டங்கள் மற்றும் ஒன்றிய-மாநில அரசின் பங்களிப்புடைய நலத்திட்டங்களின் நிதி நிலையினைக் கண்காணித்தல், கணக்குகளை

ஒத்திசைவு செய்து அறிக்கை வெளியிடுதல் முதலானவற்றை மேம்படுத்த இயலும்.

இத்திட்டத்தை செயல்படுத்துவதில் கருவூலக் கணக்குத் துறை ஒருங்கிணைப்புத் துறையாக செயல்படுகிறது. கருவூலம், பொது நிதி மேலாண்மை திட்டத்துடன் வெற்றிகரமாக ஒருங்கிணைக்கப்பட்டு, இதுவரை இத்திட்டத்தின் கீழ் 51 அரசுத் துறைகளில் 185 ஒன்றிய அரசின் நிதியுதவி பெறும் திட்டங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. பொது நிதி மேலாண்மை திட்டத்தில் இதுவரை 156 ஒற்றை ஒருங்கிணைப்பு முகமை கணக்குகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

**தமிழ்நாடு பொது நிதி கண்காணிப்பு அமைப்பு (TNPFTS)**

98. அரசு நிதி கருவூல அமைப்பின் பார்வைக்கு வெளியே உள்ள கணக்குகளுக்கு அடிக்கடி மாற்றப்படுகின்றன என்பதை பல தரவு புள்ளிகள் குறிப்பிடுகின்றன. இந்த அரசு பதவியேற்றவுடன், அரசுத் துறைகள் மற்றும் முகமைகள் மூலமாகவும், அத்தகைய கணக்குகளை வைத்திருக்கும் வங்கிகள் மூலமாகவும் அத்தகைய நிதிகளைக் கண்டறிய இரு வழியான கணக்கெடுப்பைத் தொடங்கியது. நிதித் துறையின்

மூத்த அதிகாரியின் கீழ் ஒரு சிறப்புப் பணிக் குழுவை, கணக்கை முழுமையாகச் சீரமைக்கவும், காலாவதியான மற்றும் பயன்படுத்தப்படும் நிதிகளைக் கண்டறியவும் அரசு நிறுவியுள்ளது. கூடுதலாக, IFHRMS மற்றும் PFMS ஐப் பயன்படுத்தி, அரசாங்கத்தின் அனைத்து நிதிகளும் எப்போதும் கருவூல அமைப்பின் பார்வையில் வைக்கப்படுவது உறுதி செய்யப்படும்.

தமிழ்நாடு பொது நிதி கண்காணிப்பு அமைப்பை உருவாக்க அரசாணை எண்.379 நிதி (சிறு சேமிப்பு) துறை, தேதி: 28.12.2022-ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது. அதன்படி, கணினி ஒருங்கிணைப்பாளராக M/s. டாடா கன்சல்டன்சி சர்வீசஸ் (TCS) தேர்ந்தெடுக்கப்பட்டது. இந்நிறுவனம் அதற்கான ஆரம்பகட்ட ஆய்வினை தொடங்கியுள்ளது.

## திறன் மேம்பாட்டு பயிற்சி

99. கருவூலக் கணக்குத் துறையானது கூடுதல் இயக்குநர்கள் / இணை இயக்குநர்கள் / தலைமை கணக்கு அதிகாரிகள் மற்றும் கணக்கு அதிகாரிகள் மற்றும் உதவி கணக்கு அலுவலர்கள்

ஆகிய நிலைகளில் உள்ள சுமார் 700 அதிகாரிகளை பல்வேறு துறைகள், அரசு நிறுவனங்கள், வாரியங்கள் ஆகியவற்றிற்கு நிதிக் கட்டுப்பாட்டாளர் / நிதி ஆலோசகர் / தலைமை கணக்கு அதிகாரிகளாக நியமிக்கிறது. நிதிச் சேவைகளைக் கையாளுதல், கணக்குகளை இறுதி செய்தல், உள் தணிக்கை செய்தல், வரவு-செலவுத் திட்டத்தை தயாரித்தல், வரிக் கணக்கு தாக்கல் செய்தல் மற்றும் சட்டப்பூர்வ கடமைகள் ஆகியவை இந்த அதிகாரிகளின் பொறுப்புகள் ஆகும். அதிகாரிகளின் செயல்திறன் மற்றும் அறிவை மேம்படுத்துவதற்காக, புத்தாக்க பயிற்சி வரும் ஆண்டுகளில் அனைத்து அதிகாரிகளுக்கும் வழங்கப்படும். இதற்காக தொழில் நுட்ப மேலாண்மை பயிற்சியை (Technical Managerial Training) தொழில்முறை முகவர்கள் (Professional agencies) மூலமாக வழங்க அரசாணை (நிலை) எண்.361, நிதி (க.க.3) துறை, நாள்: 28.11.2022-ல் அனுமதி அளித்துள்ளது.

இதன் தொடர்பாக, தமிழ்நாடு அரசு மற்றும் இந்திய பட்டயக் கணக்காளர்கள் நிறுவனம் (ICAI) இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் (MoU) கையெழுத்தானது. கருவூலக் கணக்குத் துறையில்

உள்ள கூடுதல் இயக்குநர்கள் (15), இணை இயக்குநர்கள் (45) மற்றும் முதன்மை கணக்கு அலுவலர்களுக்கு (85) பொருட்கள் மற்றும் சேவை வரிக்கான பயிற்சி இரண்டு கட்டங்களாக வழங்கப்பட்டது.

மேலும் 35 கணக்கு அலுவலர்கள் மற்றும் உதவி கணக்கு அலுவலர்களுக்கு முதற்கட்ட பயிற்சி இந்திய பட்டயக் கணக்காளர்கள் நிறுவனத்தால் (ICAI) வழங்கப்பட்டது.

**புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் , 2021**

100. புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் அரசு ஊழியர்கள், உள்ளாட்சி அமைப்புகள், அரசு சார்ந்த நிறுவனங்கள், வாரியங்கள் மற்றும் தமிழ்நாடு சட்டப்பேரவையில் இயற்றப்பட்ட சட்டங்களின் கீழ் ஏற்படுத்தப்பட்ட பல்கலைக்கழகங்கள், மாநில அரசு நிறுவனங்கள் (விரும்புவன மட்டும்) ஆகியவற்றில் பணிபுரியும் பணியாளர்கள் மற்றும் தகுதியுடைய அவர்தம் குடும்ப உறுப்பினர்களின் மருத்துவ சிகிச்சைக்காக தொகுப்பாண்டில் ஐந்து இலட்சம் ரூபாய் மருத்துவ உதவி பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் காப்பீட்டு

கட்டணமாக அரசு ஊழியரிடமிருந்து 300/- ரூபாய் வீதம் அவர்களது மாதாந்திர ஊதியத்திலிருந்து பிடித்தம் செய்யப்படுகிறது. புதிய மருத்துவக் காப்பீட்டு திட்டம் 30.06.2021 க்கு பிறகு மேலும் நான்காண்டுகளுக்கு சில சிறப்பு அம்சங்களுடன் நீட்டிப்பு செய்யப்பட்டுள்ளது. இப்புதிய மருத்துவக் காப்பீடு திட்டம் - 2021, பொதுத் துறை நிறுவனமான யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட் மூலம் 01.07.2021 முதல் செயல்படுத்தப்படுகிறது.

இப்புதிய திட்டத்தில், கீழ்க்காணும் நோய்களுக்கு மருத்துவ சிகிச்சை பெற நிதி உச்சவரம்பு 10 இலட்சம் ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது.

1) புற்றுநோய்க்கான அறுவை சிகிச்சை, கீமோதெரபி, கதிரியக்க சிகிச்சை மற்றும் புற்றுநோய்க் கட்டிகளுக்கான நோய்த் தடுப்பாற்றல் சிகிச்சை முறைகள்
2) கல்லீரல், சிறுநீரகம், இதயம், நுரையீரல் மற்றும் எலும்பு மஜ்ஜை மாற்று அறுவை சிகிச்சை
3) சிக்கலான இதய அறுவை சிகிச்சை மற்றும் இதய மாற்று அறுவை சிகிச்சை

4) விபத்து மற்றும் தீவிர சிகிச்சை தேவைப்படும் பல்வகைப்பட்ட எலும்பு முறிவு
5) இதய வால்வு மாற்று அறுவை சிகிச்சை, அன்யூரிசிம்ஸ் மற்றும் ஆஞ்சியோபிளாஸ்டி
6) தீயினால் ஏற்பட்ட காயங்களுக்கான சிகிச்சை
7) உறுப்பு மாற்று அறுவை சிகிச்சைக்காக நன்கொடையாளரின் உறுப்பு பெறுவதற்கு மேற்கொள்ளப்படும் சிகிச்சைக்கான செலவுகள்

மேலும், சில குறிப்பிட்ட நோய்களுக்கான சிகிச்சைகளுக்கு செலவினத்தை கூடுதலாக 10,00,000/- ரூபாய் வரை மூலதன நிதியிலிருந்து வழங்கிடவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. 14.02.2022 முதல், கோவிட் நோய் தொற்றிற்கான சிகிச்சையை குறிப்பிட்ட சிகிச்சைகளின் பட்டியலில் சேர்த்து 10 இலட்சம் ரூபாய் வரை கட்டணமில்லா சிகிச்சை பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது.

புதிய மருத்துவ காப்பீட்டு திட்டத்தின் கீழ் அரசு ஊழியர்களைச் சார்ந்து வாழும் மகன்கள் மற்றும் மகள்கள் அவர்களது வயது வரம்பினைக் கருத்தில்

கொள்ளாமல் இத்திட்டத்தின் கீழ் சிகிச்சை பெற்று பயன்பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் விபத்தினால் ஏற்படும் அங்கீகரிக்கப்பட்ட சிகிச்சைகள் மற்றும் அறுவை சிகிச்கைகளுக்கு அங்கீகரிக்கப்படாத (Non-Network) மருத்துவமனைகளிலும் சிகிச்சை மேற்கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.


மேலும், புதிய மருத்துவ காப்பீட்டு திட்டத்தின் செயல்பாடுகளை மேற்பார்வையிடவும் சிறப்பான முறையில் நடைமுறைபடுத்தவும் தகவல் தொழில்நுட்ப மென்பொருளை தொடங்கவும், கைப்பேசி பயன்பாட்டினை (Mobile Application) மேம்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது

புதிய மருத்துவ காப்பீட்டு திட்டம் 2021-ன் கீழ் அங்கீகரிக்கப்பட்ட மருத்துவமனைகளில் கட்டணமில்லா சிகிச்சை பெற அரசு ஊழியர்களுக்கு இதுவரை 6,60,960 காப்பீட்டு அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளது.

மேலும் 203 வகையான சிகிச்சைகள் (116 சிகிச்சைகள் மற்றும் 87 அறுவை சிகிச்சை நடைமுறைகள்) மற்றும் அறுவை சிகிச்சை நடைமுறைகள் மேற்கொள்வதற்கு, தமிழ்நாடு, புதுச்சேரி, திருவனந்தபுரம், பெங்களூரு மற்றும்

புதுதில்லி ஆகிய இடங்களில் உள்ள 1274 அங்கீகரிக்கப்பட்ட மருத்துவமனைகள் மற்றும் புற்றுநோய்க்கு சிகிச்சை அளிக்கக்கூடிய அரசின் 16 கதிரியக்க சிகிச்சை மையங்களில் கட்டணமில்லா மருத்துவ சிகிச்சை பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது. புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் 2021 இன் கீழ் 23.02.2023 வரை 1,08,022 பயனாளிகள் 506.41 கோடி ரூபாய் செலவில் மருத்துவ சிகிச்சை பெற்றுப் பயனடைந்துள்ளனர்.

## பணியாளர்களுக்கான புதிய மருத்துவ காப்பீட்டுத் திட்டம் 2021



இது தவிர தற்போது கோவிட்க்கான சிகிச்சைகளை அங்கீகரிக்கப்பட்ட மருத்துவ மனைகளில் மேற்கொள்ள 5 கோடி ரூபாய் நிதிய மூலதனம் (Corpus Fund) உருவாக்கப்பட்டுள்ளது. மேலும் இதுநாள் வரை 80 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 11,321 பயனாளிகள் 74.79 கோடி ரூபாய் செலவில் மருத்துவ சிகிச்சை பெற்று பயனடைந்துள்ளனர். மேலும், உயிர்காக்கும் அவசரதன்மையற்ற நிலையில் அங்கீகரிக்கப்படாத மருத்துவமனைகளில் மேற்கொண்ட கோவிட் சிகிச்சைகளுக்கான மருத்துவ செலவினத்தை மீள வழங்க 4 கோடி ரூபாய் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. இதுநாள் வரை 529 பயனாளிகள் 3.88 கோடி ரூபாய் செலவில் மருத்துவ சிகிச்சை பெற்று பயனடைந்துள்ளனர்.

**துணை செலவுச்சீட்டு வரம்பு 1000 ரூபாயிலிருந்து 2000 ரூபாயாக உயர்த்தப்பட்டது.**

101. சம்பளம் அல்லாத செலவுச்சீட்டு பட்டியில், துணை செலவுச்சீட்டு இணைப்பு 1000 ரூபாயிலிருந்து 2000 ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. இதற்காக, தமிழ்நாடு கருவூலவிதி பருமன் I-ல் கருவூல விதி 16 துணை விதி 18 (e ) மற்றும் கருவூல

விதி 16 துணை விதி 20 (i) ஐ திருத்தம் செய்ய அரசாணை (நிலை) எண்.54, நிதி (க.க.3) துறை, நாள்.24.02.2023-ன் மூலம் அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

**பணியாளர்களுக்கான இணையதள தகவல் தொகுப்பு**

102. ஒரு ஊழியர் தமிழ்நாடு அரசுப் பணியில் சேர்ந்ததில் இருந்து ஓய்வுபெறும் வரையுள்ள பல்வேறு மனிதவளச் செயல்பாடுகளைப் இணையதள தகவல் தொகுப்பில் பதிவேற்றம் செய்யப்பட்டு புதுப்பிக்கப்படுகிறது.

இணையதள தகவல் தொகுப்பில் உள்ள அம்சங்கள் பின்வருமாறு:-

- ஒரு பணியாளரின் பெயர்
- பிறந்த தேதி
- ஓய்வு பெறும் தேதி
- பணிநியமனம் செய்யப்பட்ட தேதி
- தாய் அலகு விவரம்
- சொந்த மாவட்டம்
- கல்வி தகுதிகள்
- கணவன் அல்லது மனைவி விவரங்கள்

- சிறப்புத் தேவைகளுடைய குழந்தைகளின் விவரம்
- மாற்றுத்திறனாளிகள் விவரங்கள்
- பணி விவரங்கள்
- ஒழுங்கு நடவடிக்கை விவரங்கள்

இணையதள தகவல் தொகுப்பு உருவாக்குவதன் நன்மைகள் பின்வருமாறு:-

- ஊழியர்களின் அனுபவம் மற்றும் பணிவிவரங்களை புரிந்துகொண்டு ஆய்வு செய்தல்
- ஊழியர்களின் திறன், அனுபவம் மற்றும் வெளிப்பாடு ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு முறையாக முடிவெடுப்பது.
- பணியிடமாற்றம் மற்றும் பணியமர்வில் வெளிப்படைத் தன்மையை உறுதி செய்தல்

## சிறுசேமிப்புத் துறை

103. சிறு சேமிப்பு திட்டங்கள் மிகவும் பாதுகாப்பாகவும், நியாயமான லாப விகிதத்தை அளிப்பதாலும் பொது மக்கள் தங்கள் உபரி நிதியை இத்திட்டங்களில் முதலீடு செய்கிறார்கள். சிறு சேமிப்புத் திட்டங்கள் சிறு முதலீட்டாளர்களை ஈர்த்து, அவர்களின் முதலீட்டுக்கு முழுப் பாதுகாப்பு அளிக்கின்றன. இந்தத் திட்டங்கள் இந்திய அரசின் நிதி அமைச்சகத்தால் உருவாக்கப்பட்டு அஞ்சல் நிலையங்கள் மூலம் செயல்படுத்தப்படுகின்றன.

### சிறுசேமிப்புத் திட்டங்கள்

104. சமுதாயத்தின் பல்வேறு பிரிவினரின் தேவைகளுக்கு ஏற்றவகையில், பலவிதமான சிறுசேமிப்புத் திட்டங்கள் நடைமுறையில் உள்ளன. ஒன்றிய அரசு ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல், ஜூலை, அக்டோபர் மற்றும் ஜனவரி மாதங்களில் 1-ம் தேதி சிறு சேமிப்பு திட்டங்களுக்கான வட்டி விகிதத்தை அவ்வப்போது அறிவிக்கிறது.

தற்போது 01.01.2023 முதல் நடைமுறையில் உள்ள சிறுசேமிப்புத் திட்டங்களின் வட்டி விகிதங்கள்

சிறுசேமிப்புத் துறையின் இணையதளமான (www.tnsmallsavings.org)-இல் வெளியிடப்பட்டு அவ்வப்போது மாற்றங்களும் வெளியிடப்படுகின்றன.

**செல்வமகள் சேமிப்புத் திட்டம்**

105. செல்வமகள் சேமிப்புத் திட்டம் என்ற பெண் குழந்தைகளுக்கான சேமிப்புத்திட்டத்தை ஒன்றிய அரசு 03.12.2014 முதல் அறிமுகப்படுத்தியது. இத்திட்டத்திற்கான தற்போதைய வட்டி விகிதம் 01.01.2023 முதல் 7.6 சதவீதமாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. பத்து வயதுக்குட்பட்ட பெண் குழந்தைகளுக்காக மட்டும் பிரத்யேகமாக ஏற்படுத்தப்பட்டுள்ள இத்திட்டத்தின் கீழ், அவர்களது பெற்றோர் அல்லது பாதுகாவலர் ஓர் ஆண்டிற்கு அதிகபட்சமாக 1.5 இலட்சம் ரூபாய் வரை வைப்பீடு செய்யலாம்.

**பொன்மகன் பொது வைப்புநிதி**

106. செல்வமகள் சேமிப்புத்திட்டத்திற்கு கிடைத்த வரவேற்பையொட்டி, ஆண் குழந்தைகளும் பயன்பெறும் வகையில் பொது வருங்கால வைப்பு நிதித் (PPF) திட்டம் "பொன்மகன் பொதுவைப்புநிதி" என பெயரிடப்பட்டு இந்திய

அஞ்சல்துறை மூலம் 04.09.2015 முதல் மறுபடியும் தொடங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ், பத்து வயதிற்குட்பட்ட ஆண் குழந்தைகள், அவர்களது பெற்றோர் அல்லது பாதுகாவலர் மூலமும், பத்து வயதிற்கு மேற்பட்டவர்கள் தாங்களாகவும் வைப்புநிதிக் கணக்கைத் தொடங்கலாம். ஓர் ஆண்டிற்கு 1.5 இலட்சம் ரூபாய் வரை வைப்பீடு செய்ய வாய்ப்புள்ள இத்திட்டத்தில் 01.01.2023 முதல் 7.1 சதவீத வட்டி வழங்கப்படுகிறது.

## மூத்த குடிமக்கள் சேமிப்புத்திட்டம்

107. 5 ஆண்டுகள் மூத்த குடிமக்கள் சேமிப்புத் திட்டத்தில் 01.01.2023 முதல் 8.0 சதவீத வட்டி வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் மூன்று மாதங்களுக்கு ஒருமுறை வட்டி வழங்கப்படும். கணக்கினை மேலும் மூன்று ஆண்டுகளுக்கு நீட்டிக்கும் வசதி உண்டு. கணக்கினை முன்கூட்டியே முடிக்கும் பொழுது ஓராண்டிற்கு பிறகு 1.5 சதவீதமும், இரண்டு ஆண்டிற்கு பிறகு ஒரு சதவீதமும் முதலீட்டுத் தொகையில் பிடித்தம் செய்து வழங்கப்படும்.

**வெகுமதிகள்**

108. ஒரு சில சிறுசேமிப்புத் திட்டங்களின் கீழ் முகவர்கள் மூலமாக திரட்டப்படும் முதலீடுகளுக்கு ஒன்றிய அரசு தரகுத்தொகை வழங்குகிறது. சிறுசேமிப்புத் முகவர்களை ஊக்குவிப்பதற்கும் பொதுமக்களின் மனங்களில் சேமிக்கும் பண்பை வளர்ப்பதற்கும், சிறுசேமிப்பில் சிறந்து விளங்கும் மகளிர் (MPKBY) முகவர்களுக்கு ஊராட்சி ஒன்றியம், மாவட்டம் மற்றும் மாநில அளவிலும் மற்றும் நிலை முகவர்களுக்கு (SAS) மாவட்டம் மற்றும் மாநில அளவிலும் ஒவ்வொரு ஆண்டும் தமிழ்நாடு அரசு வெகுமதிகளை வழங்கி வருகின்றது.

2022-23 ஆம் ஆண்டிற்கு, 709 முகவர்கள் 9,68,000/- ரூபாய் அளவில் பயனடைந்துள்ளனர்.

**உலக சிக்கன நாள்**

109. சிறு சேமிப்புத் துறையானது சிறு சேமிப்புத் திட்டங்களின் கீழ் வசூல் செய்வதை ஊக்குவிப்பதிலும், தமிழ்நாடு முழுவதும் உள்ள முதலீட்டாளர்கள் மற்றும் முகவர்களின் குறைகளை இணையம் வாயிலாக (www.tnsmallsavings.org) தீர்வு செய்வதிலும் முக்கியப் பங்காற்றுகிறது. ஒவ்வொரு

ஆண்டும் உலக சிக்கன நாள் கொண்டாடப்பட்டு வருகிறது. அதன்படி, மாணவர்களிடையே கட்டுரை, பேச்சு, நடனம், நாடக போட்டிகள் நடத்தப்பட்டு, தமிழ்நாடு சிறுசேமிப்புத் துறை மூலம் மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

2022-2023 நிதியாண்டில், அரசால் 3,30,000/- ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு, 933 மாணவர்கள் பயனடைந்துள்ளனர்.

110. பொதுமக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில், சிறுசேமிப்பு துறை சார்பில், சென்னை மற்றும் மாவட்டங்களில் நடைபெறும் வர்த்தக கண்காட்சி / அரசு கண்காட்சியில் சிறுசேமிப்பு அரங்கு அமைத்தும், துண்டு பிரசுரங்களும் விநியோகம் செய்யப்படுகின்றன. மேலும், மாவட்ட அளவில் ஆண்டு தோறும் விழிப்புணர்வு நாடகங்கள் நடத்தப்படுகின்றன.

# தமிழ்நாடு உட்கட்டமைப்பு மேம்பாட்டு வாரியம்

111. தமிழ்நாடு உட்கட்டமைப்பு மேம்பாட்டு சட்டம் 2012-இன் கீழ் புதிய உட்கட்டமைப்புத் திட்டங்களைக் கண்டறிதல், கருத்துருவாக்கல், முன்னுரிமை அளித்தல், செயல்படுத்துதல் போன்ற பணிகளை அரசு மற்றும் தனியார் பங்களிப்புடன் செயல்படுத்த சட்டரீதியான வழிவகைகளை உருவாக்குகிறது. மேலும், உட்கட்டமைப்பு திட்டங்களுக்கான திட்ட தயாரிப்பு, கட்டமைப்பு, நிதியுதவி, செயல்படுத்துதல் மற்றும் பராமரிப்பு ஆகியவற்றிற்கான உகந்த சூழலை ஏற்படுத்துவதற்கான அமைப்புசார் வழிவகைகள் உருவாக்கப்பட்டுள்ளன. தமிழ்நாடு உட்கட்டமைப்பு விதிகள் 2012 இச்சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட நிதிகளை நிருவகிக்கவும், அதிலிருந்து திட்டங்களுக்கு நிதியுதவி அளிக்கவும் வழிமுறைகளை உருவாக்குகிறது. தமிழ்நாடு உட்கட்டமைப்பு மேம்பாட்டு வாரிய ஒழுங்கு முறைகள் 2013-இன் கீழ் வாரியம் செயல்படுவதற்கான நடைமுறைகள் மற்றும் திட்ட

ஆவணங்களுக்கு ஒப்புதல் அளிப்பதற்கான வழிமுறைகள் வரையறுக்கப்பட்டுள்ளன.

112. தமிழ்நாடு உட்கட்டமைப்பு மேம்பாட்டு சட்டம் 2012 இன் கீழ் தோற்றுவிக்கப்பட்ட இவ்வாரியம் தமிழ்நாட்டில் உட்கட்டமைப்பு மேம்பாட்டிற்காக தோற்றுவிக்கப்பட்ட முகமையாக செயல்படுகிறது. இவ்வாரியமானது மாநிலத்தில் உட்கட்டமைப்பு வளர்ச்சி நடவடிக்கைகளை ஒருங்கிணைப்பதுடன், பொதுத்துறைகள் வாயிலாகவும் மற்றும் பொது தனியார் பங்களிப்பு முறையின் வாயிலாகவும் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு வகை செய்கிறது.

113. இவ்வாரியத்தின் தலைவராக மாண்புமிகு முதலமைச்சரும் (அலுவல்வழி) மற்றும் துணைத் தலைவராக மாண்புமிகு நிதி அமைச்சரும் (அலுவல்வழி) செயல்படுகின்றனர். இவ்வாரியத்தில் தலைமைச் செயலாளர் தலைமையில் ஒரு நிர்வாகக் குழு உள்ளது.

114. தமிழ்நாடு உட்கட்டமைப்பு மேம்பாட்டு சட்டம் 2012-இன் கீழ் உருவாக்கப்பட்டுள்ள தமிழ்நாடு உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியானது

திட்டங்களின் வடிவமைப்பு, மேம்பாடு, செயல்பாடு, நிருவாகம், மேலாண்மை ஆகியவற்றை எளிதாக்க நிதி உதவி அளிக்கிறது. திட்ட தயாரிப்பு நிதியானது ஆய்வுகள் நடத்துதல், நிபுணர்கள் மற்றும் ஆலோசகர்களின் சேவைகளை அமர்த்துவது, சாத்தியக்கூறு ஆய்வுகள், விரிவான திட்ட ஆய்வுகள், திறன் மேம்பாடு, ஆராய்ச்சி போன்ற நோக்கங்களுக்கு நிதி உதவி அளிக்கிறது.

115. மாநிலத்தில் உட்கட்டமைப்பு மேம்பாட்டில் தனியார் துறையின் பங்களிப்பை ஊக்குவிக்கவும், எளிதாக்கவும், திறந்த சந்தையில் இருந்து வல்லுநர்களை பணியமர்த்துதல், வாரியத்தின் நடைமுறைகளை எளிதாக்குதல், அதிகாரப் பகிர்வை மேம்படுத்துதல் மற்றும் இது தொடர்பான சட்ட திருத்தங்களை மேற்கொள்ளுதல் ஆகியவற்றின் மூலம் வாரியத்தை மேலும் வலுப்படுத்த அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

116. இதுவரை தலைமைச் செயலகத்தில் இயங்கி வந்த இவ்வாரியம், தற்போது தேவையான அலுவலர்கள் மற்றும் வல்லுநர்களோடு தனி அலுவலகத்திற்கு மாற்றப்பட்டுள்ளது. மேலும்

தனியார் பங்களிப்புடன் திட்டங்கள் செயல்படுத்தப்படக் கூடிய வாய்ப்புகள் அதிகமுள்ள முக்கிய துறைகளுக்கு உதவி செய்வதற்காக வாரியத்தின் மூலமாக வல்லுநர்களை பணியமர்த்த இவ்வாரியம் முடிவு செய்துள்ளது. இந்த வல்லுநர்கள் பொருத்தமான திட்டங்களைக் கண்டறிதல், ஆலோசகர்களை பணியமர்த்தல், ஆவணத்தயாரிப்பில் உதவி செய்தல், மற்றும் வாரியத்தின் ஒப்புதல்களை விரைவாகப் பெறுவதற்கு ஒருங்கிணைத்தல் போன்ற பணிகளில் துறைகளுக்கு உதவி புரிவார்கள். மேலும் வாரியத்தின் புதிய இணையதளம் நவீன வசதி மற்றும் வடிவமைப்புடன் தொடங்கப்பட்டுள்ளது.

117. முக்கிய அரசு தனியார் பங்களிப்புடன் செயல்பட கீழ்க்காணும் திட்டங்களுக்கு தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாட்டு வாரியம் ஒப்புதல் அளித்துள்ளது.

- பெருநகர சென்னை மாநகராட்சியில் பொதுமக்களின் வசதிக்காக கழிவறைகள் அமைத்தல்

- சென்னையில் உள்ள காவல்துறை பொதுப் பள்ளியின் செயல்பாடு மற்றும் பராமரிப்பு
- மாமல்லபுரத்தில் மரகத பூங்கா (ஒளிரும்தோட்டம்) அமைத்தல்
- கடலூர் துறைமுகத்திற்கான துறைமுக ஆபரேட்டர் தேர்வு
- 6 நவீன அரிசி ஆலைகள் அமைத்தல்
- சென்னை வெளிப்புற 6 வழிசாலைகளில் சுங்கச்சாவடிகள் அமைத்தல்
- சென்னையில் 3 பேருந்து முனையங்களை நவீனப்படுத்தும் திட்டம்
- மாதவரம் மற்றும் கிளாம்பாக்கம் பேருந்து நிலையத்தினை நிர்வாகித்தல் மற்றும் செயல்படுத்துதல்
- சென்னையில் 9 பேருந்து முனையங்களை நவீனப்படுத்தும் திட்டம்
- இருக்கூரில் சைலோஸ் செயல்பாடு மற்றும் பராமரிப்பு

118. ஒரு டிரில்லியன் டாலர் பொருளாதாரம் என்ற தொலைநோக்குப் பார்வையை 2030-ஆம் ஆண்டுக்குள் நனவாக்க, ஒட்டுமொத்த உத்தி மற்றும் செயல்திட்டத்தை உருவாக்குவதற்கான ஆலோசனை நிறுவனம் தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாட்டு வாரியத்தால் நியமிக்கப்பட்டுள்ளது.

119. தமிழ்நாடு உட்கட்டமைப்பு மேம்பாட்டு வாரியம், தமிழ்நாடு அரசால் மேம்படுத்தப்படவுள்ள Greenfield/Brownfield உட்கட்டமைப்பு திட்டங்களின் மேம்பாட்டில் தனியார்துறை பங்கேற்பதற்கான வாய்ப்புகளை அடையாளம்காண, தேசிய முதலீடு மற்றும் உட்கட்டமைப்பு நிதி லிமிடெட் (NIIFL) உடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் (MOU) கையெழுத்திட்டுள்ளது.

120. மேலும், அரசு தமிழ்நாடு உட்கட்டமைப்பு மேம்பாட்டு வாரியத்தை பலப்படுத்தும் பணிகளை மேற்கொள்ளும் நேரத்தில், மறுபுறம் உட்கட்டமைப்புக்கான நிதியாதாரங்களை தமிழ்நாடு உட்கட்டமைப்பு நிதி மேலாண்மை நிறுவனம் (TNIFMC), மூலமாக திரட்டுகிறது. இவ்விரு

அமைப்புகளும் இணைந்து பணியாற்றுவதை அரசு உறுதி செய்யும்.

121. தமிழ்நாட்டில் தனியார் பங்களிப்புடன் செயல்படுத்தப்படக் கூடிய உட்கட்டமைப்பு திட்டங்களை தரப்படுத்தல் மற்றும் முன்னுரிமை பற்றிய ஆய்வை மேற்கொள்வதற்காக இங்கிலாந்து அரசாங்கத்தின் தொழில்நுட்ப உதவியை தமிழ்நாடு அரசு ஏற்றுக்கொண்டது. இந்த ஆய்வின் முக்கிய நோக்கம், திட்டத் தேர்வுக்கான ஒரு கட்டமைப்பை வடிவமைப்பதாகும் - தமிழ்நாடு அரசின் ஒட்டுமொத்த வளர்ச்சி நோக்கத்திற்கு ஏற்ப திட்டங்களை தேர்ந்தெடுப்பதற்கான வடிவமைப்பை உருவாக்குவது மற்றும் அரசு-தனியார் பங்களிப்புடன் செயல்படுத்தப்படக் கூடிய சிறப்பான திட்டங்களுக்கான பட்டியலை உருவாக்குவது ஆகும். இதன் இறுதி அறிக்கை எதிர்நோக்கப்படுகிறது.

**சென்னை மாநகர கூட்டாண்மை கட்டம்- 1.**

**நீடித்த நகர்புர சேவைகள் திட்டம்**

122. சென்னை மாநகரம் தொடர்ந்து நிலைக்கத்தக்க வளர்ச்சி பெறுவதை உறுதி

செய்வதற்கு சென்னை மாநகரக் கூட்டாண்மை என்னும் தனித்தன்மை வாய்ந்த வளர்ச்சித் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் முதல் கட்டம் உலக வங்கி மற்றும் ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கியின் கடனுதவியுடன் நீடித்து நிலைக்கத்தக்க சேவைகளை சென்னை பெருநகர மக்களுக்கு வழங்குவதை உறுதி செய்ய பல்துறைகளை ஒருங்கிணைத்து செயல்படுத்தும் இறுதி விளைவு சார்ந்த திட்டமாக (Program for Results) செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்திற்கான மொத்த செலவினம் 701 மில்லியன் டாலர் ஆகும். இதில் உலக வங்கி மற்றும் ஆசிய உட்கட்டமைப்பு வளர்ச்சி முதலீட்டு வங்கியின் பங்களிப்புகள் தலா 150 மில்லியன் டாலர் ஆகும். தமிழ்நாடு உட்கட்டமைப்பு மேம்பாட்டு வாரியம் திட்டக்கண்காணிப்பு முகமையாக ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்பு பணியினை மேற்கொள்கிறது. முதன்மைச் செயல் அலுவலர், தமிழ்நாடு உட்கட்டமைப்பு மேம்பாட்டு வாரியம் இத்திட்டத்தின் இயக்குநராக செயல்படுகிறார். திட்ட செயலாக்க நடவடிக்கைகள் மற்றும் வழங்கல் சார்ந்த குறியீடு சாதனைகள் கீழ்க்கண்ட முகமைகளின் பொறுப்பாகும்.

1. பெருநகர சென்னை மாநகராட்சி
2. சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம்.
3. மாநகர போக்குவரத்துக் கழகம்,
4. நீர்வளத்துறை,
5. சென்னை ஒருங்கிணைந்த பெருநகர போக்குவரத்து ஆணையம்,

123. பெருநகர சென்னை மாநகராட்சியின் மூலம் (இரண்டு) வழங்கல் சார்ந்த சாதனை முடிவுகள் எய்தப்பட்டு, 54.63 கோடி ரூபாய் அரசுக்கு நிதியாக மீள பெறப்பட்டுள்ளது

**சென்னை மாநகர கூட்டாண்மை கட்டம்- 2.**

124. சென்னை மாநகரக் கூட்டாண்மை கட்டம் - 2 ஆனது சென்னை பெருநகர பகுதியில் நிலையான இடம்சார்ந்த திட்டமிடல் மற்றும் நகர்ப்புர போக்குவரத்து வசதிகள் ஆகியவற்றை வழங்குவதையும், நிறுவனங்களை வலுப்படுத்துவதையும் குறிக்கோளாக கொண்டுள்ளது. மொத்த திட்டச் செலவு 572 மில்லியன் அமெரிக்க டாலர் என மதிப்பிடப்பட்டுள்ளது. இதில் உலக வங்கியின் உதவி 400 மில்லியன் டாலராக இருக்கும் (அதாவது

70 % கடன் கூறு). சென்னை மாநகரக் கூட்டாண்மை கட்டம்-2 க்கான கடன் வழங்கும் கருவி ''முதலீட்டு திட்ட நிதியளிப்பாக'' இருக்கும். உலக வங்கியின் கடன் நடைமுறைகள் இத்திட்டத்திற்கும் பொருந்தும்.

125. முதல்நிலை திட்ட அறிக்கைக்கு (மு.நி.தி.அ.எண்.11626) ஒன்றிய அரசினால் பிப்ரவரி 2023-ல் ஒப்புதல் அளிக்கப்பட்டது.

## தமிழ்நாடு உட்கட்டமைப்பு நிதி மேலாண்மை நிறுவனம்(TNIFMC)

126. தமிழ்நாடு உட்கட்டமைப்பு நிதி மேலாண்மை நிறுவனம் (TNIFMC) என்பது ஒரு மாற்று முதலீட்டு நிதி மேலாண்மை நிறுவனமாகும், இது தொழில்துறை மற்றும் வணிகத் துறைகளில் தமிழ்நாட்டின் தலைமையை வலுப்படுத்த, மாநிலத்திற்கு முதலீடுகளை ஈர்ப்பதன் மூலம் பொறுப்பான பொருளாதார வளர்ச்சி மற்றும் அதிகரித்த வேலை வாய்ப்புகளை மேம்படுத்தும் வகையில், தமிழ்நாடு உட்கட்டமைப்பு மேம்பாட்டு வாரியத்தால் (TNIDB) உருவாக்கப்பட்டது. இந்நிறுவனத்தின் 49 சதவிகித பங்குகளை தமிழ்நாடு உட்கட்டமைப்பு மேம்பாட்டு வாரியமும் 51 சதவிகித பங்குகளை நிதி நிறுவனங்களும் வைத்துள்ளன. இந்நிறுவனம் இந்திய பத்திரங்கள் மற்றும் பரிவர்த்தனை வாரியத்தால் (SEBI) ஒழுங்குபடுத்தப்படுகிறது. தமிழ்நாடு உறைவிட நிதி (Tamil Nadu Shelter Fund) மற்றும் தமிழ்நாடு வளர்ந்து வரும் துறை விதை நிதியம் (Tamil Nadu Emerging

Sector Seed Fund) ஆகிய நிதிகளை இந்நிறுவனம் மேலாண்மை செய்து வருகிறது.

**தமிழ்நாடு உறைவிட நிதி (TNSF)**

127. தமிழ்நாடு உறைவிட நிதி, உலக வங்கி மற்றும் ஆசிய வளர்ச்சி வங்கியின் ஆதரவுடன், குறைந்த விலை வீட்டுத் திட்ட நிதியில் (வாடகை மற்றும் விற்பனை ஆகிய இரண்டு மாதிரிகளிலும்) கவனம் செலுத்துகிறது. இந்த நிதி 658 கோடி ரூபாய் உறுதி செய்யப்பட்ட மூலதனத்தை கொண்டுள்ளது. இந்த நிதி பணிபுரியும் பெண்கள் விடுதிகள் மற்றும் தொழில்துறை வீட்டுத் திட்டங்கள் உள்ளிட்ட நான்கு குறைந்த விலை வீட்டுத் திட்டங்களில் முதலீடு செய்ய 291 கோடி ரூபாய்க்கு ஒப்புதல் அளித்துள்ளது. 578 கோடி ரூபாய் மதிப்பிலான திட்டங்களை இந்த நிதி மதிப்பீடு செய்து வருகிறது.

**தமிழ்நாடு வளர்ந்து வரும் துறை விதை நிதியம் (TNESSF).**

128. தமிழ்நாடு வளர்ந்து வரும் துறை விதை நிதி, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் ஜனவரி 27, 2023 அன்று முறையாக தொடங்கப்பட்டு ஐந்து புத்தொழில் நிறுவனங்களுக்கு

13.4 கோடி ரூபாய்க்கான அனுமதி ஆணைகள் வழங்கப்பட்டன. தமிழ்நாடு வளர்ந்து வரும் துறை விதை நிதியம் (TNESSF), வளர்ந்து வரும் துறைகளை மையமாக கொண்டு, மேம்பாட்டு மூலதன (Venture Capital) முதலீடுகள் வடிவில் இடர் மூலதனத்தை வழங்குகிறது. இந்த நிதியானது தமிழ்நாடு அரசு, தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் (TIDCO) மற்றும் டைடல் பூங்கா (TIDEL Park) ஆகியவற்றிலிருந்து 100 கோடி ரூபாய் உறுதி செய்யப்பட்ட மூலதனத்தை கொண்டுள்ளதுடன் மேலும் நிறுவன முதலீட்டாளர்களிடமிருந்து 400 கோடி ரூபாய் திரட்டுகிறது. இன்று வரை, இந்நிதி 27.4 கோடி ரூபாய் மதிப்பிலான எட்டு முதலீடுகளுக்கு ஒப்புதல் அளித்துள்ளது.

**தமிழ்நாடு பசுமை காலநிலை நிதி (TNGCF)**

129. தமிழ்நாட்டில் பசுமை உட்கட்டமைப்பில் முதலீடுகளை அதிகரிக்க, சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறையானது "தமிழ்நாடு பசுமை காலநிலை நிதி (TNGCF)" என்ற நிதியை 100 கோடி ரூபாயில் அமைக்க உறுதி செய்துள்ளது. 2000 கோடி ரூபாய் முதலீட்டு இலக்குடன் கூடிய இந்நிதி தமிழ்நாடு உட்கட்டமைப்பு நிதி மேலாண்மை

நிறுவனத்தால் நிர்வகிக்கப்படும். பல மேம்பாட்டு நிதி நிறுவனங்கள் இந்த நிதியில் முதலீடு செய்ய விருப்பம் தெரிவித்துள்ளன.

**தமிழ்நாடு உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதி (TNIDF)**

130. உட்கட்டமைப்பில் தனியார் துறை பங்களிப்பை ஈர்க்கும் வகையில், 8,000 கோடி ரூபாய் இலக்கு கொண்ட "தமிழ்நாடு உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதி (TNIDF)" என்ற புதிய நிதியில் 1000 கோடி ரூபாய் முதலீடு செய்ய தமிழ்நாடு உட்கட்டமைப்பு மேம்பாட்டு வாரியம் (TNIDB) மூலம் உறுதியளிக்கப்பட்டுள்ளது. இது மாநிலத்தில் தனியார் துறை முதலீடுகளுக்கு புதிய உத்வேகத்தை அளிக்கும்.

**முனைவர் பழனிவேல் தியாக ராஜன்**
நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத்
துறை அமைச்சர்

# இணைப்புகள்

## இணைப்பு – 1

## உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை

### 1(அ). உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறையின் தணிக்கை வரம்பிற்குட்பட்ட நிறுவனங்கள்

| வ. எண் | நிறுவனங்களின் பெயர் | மொத்த எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | மாநகராட்சிகள் | 21 |
| 2 | நகராட்சிகள் | 138 |
| 3 | பேரூராட்சிகள் | 490 |
| 4 | மாவட்ட ஊராட்சிகள் | 36 |
| 5 | ஊராட்சி ஒன்றியங்கள் | 388 |
| 6 | கிராம ஊராட்சிகள் (ஆண்டுதோறும் சுழற்சி 22% முறையில்) மொத்த கிராம ஊராட்சிகளின் எண்ணிக்கை - 12525 | 2839 |
| 7 | பல்கலைக் கழகங்கள் | 23 |
| 8 | நூலக ஆணைக்குழுக்கள் | 32 |
| 9 | மாவட்ட வேளாண்மை விற்பனைக் குழுக்கள் | 32 |
| 10 | உள்ளூர் திட்டக் குழுமங்கள் | 29 |
| 11 | தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்றம் | 1 |
| 12 | அறக்கட்டளை பொருளாளர் | 1 |
| 13 | அரசர் சத்திரம் | 1 |
| 14 | இராஜவேதபாடசாலை | 1 |
| | **மொத்தம்** | **4032** |

## 1(ஆ). உடன்நிகழ் தணிக்கை செயல்படுத்தப்படுகின்ற மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகள்

| வ. எண் | மாநகராட்சிகள் | நகராட்சிகள் |
|---|---|---|
| 1. | சென்னை | மறைமலைநகர் |
| 2. | ஆவடி | திருவண்ணாமலை |
| 3. | காஞ்சிபுரம் | பொள்ளாச்சி |
| 4. | கடலூர் | உதகமண்டலம் |
| 5. | தாம்பரம் | புதுக்கோட்டை |
| 6. | வேலூர் | கொடைக்கானல் |
| 7. | சேலம் | பழனி |
| 8. | கரூர் | கோவில்பட்டி |
| 9. | மதுரை | இராஜபாளையம் |
| 10. | திண்டுக்கல் | |
| 11. | கோயம்புத்தூர் | |
| 12. | திருப்பூர் | |
| 13. | ஈரோடு | |
| 14. | திருச்சிராப்பள்ளி | |
| 15. | தஞ்சாவூர் | |
| 16. | கும்பகோணம் | |
| 17. | திருநெல்வேலி | |
| 18. | தூத்துக்குடி | |
| 19. | நாகர்கோவில் | |

## இணைப்பு – 2

## கூட்டுறவுத் தணிக்கைத் துறை

**2. நிருவாகப் பதிவாளர்களின் கட்டுப்பாட்டிலுள்ள கூட்டுறவுத் தணிக்கைத் துறையின் தணிக்கை வரம்பிற்கு உட்பட்ட கூட்டுறவுச் சங்கங்களின் விவரம்**

| வ. எண். | நிர்வாகப் பதிவாளர்களின் விவரம் | கூட்டுறவு சங்கங்களின் மொத்த எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் | 8459 |
| 2. | கைத்தறி மற்றும் துணி நூல் இயக்குநர் | 1356 |
| 3. | தொழில் மற்றும் வணிகத் துறை ஆணையர் | 302 |
| 4. | தலைமைச் செயல் அலுவலர், தமிழ்நாடு கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியம் | 175 |
| 5. | தலைமைச் செயல் அலுவலர், பனைப் பொருள் வளர்ச்சி வாரியம் | 734 |
| 6. | கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் (வீட்டு வசதி) | 712 |

| வ. எண். | நிர்வாகப் பதிவாளர்களின் விவரம் | கூட்டுறவு சங்கங்களின் மொத்த எண்ணிக்கை |
|---|---|---|
| 7. | மீன் வளத் துறை இயக்குநர் | 1398 |
| 8. | கால்நடைப் பராமரிப்பு மற்றும் கால்நடை மருத்துவப்பணிகள் ஆணையர் | 111 |
| 9. | சர்க்கரைத் துறை ஆணையர் | 17 |
| 10. | வேளாண்மைத் துறை இயக்குநர் (எண்ணெய் வித்துக்கள்) | 1 |
| 11. | வேளாண் பொறியியல் மற்றும் சேவை கூட்டுறவு சங்கங்களின் இயக்குநர் | 102 |
| 12. | பட்டு வளர்ச்சித் துறை இயக்குநர் | 25 |
| 13. | சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை இயக்குநர் | 126 |
| 14. | ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை இயக்குநர் | 47 |
| 15 | துணி நூல் இயக்குநர் | 8 |
| | **மொத்தம்** | **13573** |

## இணைப்பு – 3

## மாநில அரசுத் தணிக்கைத் துறை

3. **மாநில அரசுத் தணிக்கைத் துறையால் தணிக்கை செய்யப்படும் முக்கியமான நிறுவனங்கள் / திட்டங்களின் விவரம்.**

1. தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம்
2. தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம்
3. சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம்
4. தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம்
5. தமிழ்நாடு கதர் கிராம தொழில் வாரியம்
6. முதலமைச்சரின் உழவர் பாதுகாப்பு (சமூக பாதுகாப்பு) திட்டம்
7. நாட்டுப்புற கலைஞர் நல வாரியம்
8. தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம்
9. தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர் நல வாரியம்
10. 15 அமைப்பு சாரா தொழிலாளர் நல வாரியங்கள்
11. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் கல்வி உதவித்தொகைத் திட்டம்
12. அண்ணா நிருவாகப் பணியாளர் கல்லூரி
13. மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகுகள்

14. தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம்

15. ஆசிரியர் தேர்வு வாரியம்

16. நிகர்நிலை பல்கலைக்கழகங்களின் நாட்டு நலப் பணித் திட்டம்

17. தமிழ்நாடு அரசு மருத்துவ உதவித் திட்டம்

18. குடும்ப பாதுகாப்பு நல நிதி

19. மாண்புமிகு முதலமைச்சரின் பொது நிவாரண நிதி

20. அரசு உதவி பெறும் தொழில்நுட்ப பயிலகங்கள் (ம) பொறியியல் கல்லூரிகள்

21. அனைத்து அரசு துறைகளின் ஊதிய நிர்ணயத் தணிக்கை

22. பாராளுமன்ற / சட்டமன்ற தேர்தல் செலவின தொகை

அச்சிட்டோர் : அரசு மைய அச்சகம், சென்னை - 600 001.